வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu வார மலர் ඊළනාඩු








Email : news@eelanadu.lk மலர் : 05 22.09.2024 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 266 பக்கங்கள் : 16


## தபால்மூல வாக்களிப்பில்

# அநுரகுமார முன்னிலை!

கொழும்பு, செப்ரெம்பர் 22

**இன்று அதிகாலை வரை வெளியான ஜனாதிபதித் தேர்தல் தபால் மூல வாக்களிப்பின் 15 மாவட்டங்களின் முடிவுகளின் பிரகாரம் 14இல் அநுரகுமார முன்னிலை வகிக்கிறார். 2ஆவது இடத்தில் ரணில் நீடிக்கின்றபோதிலும் இருவருக்கும் இடையே மிகப்பெரும் வாக்கு வித்தியாசம் உள்ளமை குறிப்பிடத்தக்கது.**



எனினும், சிறுபான்மை மக்கள் அதிகம் வாழும் மாவட்டங்களில் ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸ ஆகியோர் முன்னிலை பெற்றுள்ளனர். வன்னித் தேர்தல் மாவட்டத்தில் மட்டுமே தமிழ்ப் பொது வேட்பாளர் பா. அரியநேத்திரன் கணிசமான வாக்குகளை பெற்றுள்ளார். எனினும், அங்கும் அவரால் நான்காவது இடத்தையே பெறமுடிந்தது.

15

## தேர்தல் வரலாற்றிலேயே மிக அமைதியான தேர்தல்

### தேர்தல் ஆணையாளர் பெருமிதம்

கொழும்பு, செப். 22

தேர்தல் வரலாற்றிலேயே அமைதியான முறையில் நடைபெற்ற சிறந்த தேர்தல் இது என்று தான் நம்புவதாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் சிறீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று மாலை செய்தியாளர்களை சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், தேர்தல் நாளில் எந்த வன்முறையும் பதிவாகவில்லை. பல மாவட்டங்களில் 75 சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகள் பதிவாகின என்றும் அவர் கூறினார். (ஐ)

## ஜனாதிபதித் தேர்தல்:

# வடக்கு, கிழக்கிலும் மக்கள் நேற்று ஆர்வமாக வாக்களிப்பு

யாழ்ப்பாணம், செப். 22

நாட்டின் ஒன்பதாவது ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் நேற்று சனிக்கிழமை காலை 7 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை நடைபெற்றது.

நேற்றைய தினம் வடக்கு, கிழக்கிலும் மக்கள் பெரும் ஆர்வத்துடன் வாக்களிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்படி, வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 65.9 சதவீத வாக்களிப்பும் கிளிநொச்சி மாவட்டத்தில் 68.6 வீத வாக்களிப்பும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 73.3 சதவீத வாக்களிப்பும் வவுனியாவில் 72 சதவீத வாக்களிப்பும், மன்னாரில் 71 சதவீத வாக்களிப்பும் இடம்பெற்றுள்ளன.

இதேபோன்று, கிழக்கு மாகாணத்தில் திருகோணமலையில் 76.8 சதவீத வாக்களிப்பும் மட்டக்களப்பில் 70 சதவீத வாக்களிப்பும் திகாமடுல்ல

15

## நாளைய தினம் விசேட விடுமுறை

கொழும்பு, செப். 22

நாளை திங்கட்கிழமை விசேட அரச விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விசேட விடுமுறையை பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் பிரதீப் யசரத்ன தெரிவித்துள்ளார். (ஐ)

## நாடு முழுவதும் விசேட பாதுகாப்பு!

### பொலிஸ் பேச்சாளர் அறிவிப்பு

கொழும்பு, செப். 22

உத்தியோகபூர்வமாக தேர்தல் முடிவுகள் முழுமையாக அறிவிக்கப்படும்வரை நாடு முழுவ தும் ரீதியில் விசேட பாதுகாப்பு திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது எனறு பொலிஸ் ஊடக பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ அறிவித்துள்ளார்.

தேர்தலுக்கு பிந்தைய நாட்களில் பொது மக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காகவே இந்த விசேட நடவடிக்கை

15

## தேர்தல் விதிமீறல் 337 முறைப்பாடுகள்!

கொழும்பு, செப். 22

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் நேற்று மாலை வரை தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு 337 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றன என்று தெரிவிக்கப்பட்டது.

தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு 125 முறைப்பாடுகளும் மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையங்களுக்கு 211 முறைப்பாடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளன.

இதன்படி, ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாகக் கிடைத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 5 ஆயிரத்து 551ஆக அதிகரித்துள்ளது.

15

## 70 சதவீதத்துக்கு மேல் வாக்குகள் பதிவாகின!

கொழும்பு, செப். 22

நாட்டின் 9ஆவது ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான தேர்தல் நேற்று சனிக்கிழமை காலை 7 மணி தொடக்கம் பிற்பகல் 4 வரை பதிவாகின.


மக்களின் வாக்களிப்பு மாவட்ட ரீதியாக பதிவான சதவீதம் வருமாறு,

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | - 66 சதவீதம் |
| வன்னி | - 71 சதவீதம் |
| திகாமடுல்ல (அம்பாறை) | - 74 சதவீதம் |
| மட்டக்களப்பு | - 70 சதவீதம் |
| திருகோணமலை | - 76 சதவீதம் |

15

## யாழ். நல்லூர் தொகுதியில் அரியநேத்திரன் முன்னிலை!

யாழ்ப்பாணம், செப். 23



யாழ்ப்பாணம் - நல்லூர் தொகுதியில் தமிழ்ப் பொது வேட்பாளர் பா. அரியநேத்திரன் 10 ஆயிரத்து 97 வாக்குகளை பெற்று முன்னிலை பெற்றுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் இன்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை நல்லூர் தொகுதியின் முடிவு அறிவிக்கப்பட்டது. இதில், தமிழ்ப் பொது வேட்பாளர்

15

## சட்டத்தை மீறிய 10 பேர் கைது!

கொழும்பு, செப். 22

நேற்றைய தினம் தேர்தல் சட்டத்தை மீறிய 10 பேர் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

இதேவேளை, நாட்டின் அண்மைக்கால வரலாற்றில் மிகவும் அமைதியான முறையில் நடைபெற்ற தேர்தல் இதுவாகும் என பவ்ரல்

15

## சிலிண்டர் வெடித்து பெண் உயிரிழப்பு

### நீர்வேலியில் துயரம்

யாழ்ப்பாணம், செப். 22

சமையல் எரிவாயு சிலிண்டர் வெடித்ததில் மூதாட்டி ஒருவர் உயிரிழந்தார் என்று கூறப்படுகின்றது.

நீர்வேலியில் நேற்று காலை இடம்பெற்ற இந்த சம்பவத்தில் தனியாக வசித்து வந்த 65 வயது பெண் ஒருவரே உயிரிழந்தார்.

வீட்டில் வைக்கப்பட்டிருந்த எரிவாயு சிலிண்டர் வெடித்து ஏற்பட்ட தீயாலேயே உயிரிழந்தார்

15

## வல்லிபுர ஆழ்வார் கடல் தீர்த்தத்தில் காணாமல்போனவரின் சடலம் மீட்பு!

**- எஸ். தில்லைநாதன் -**

வடமராட்சி, செப். 22

வரலாற்று பிரசித்தி பெற்ற வல்லிபுர ஆழ்வார் ஆலய சமுத்திரத் தீர்த்தத் திருவிழாவில் நீராடியபோது காணாமல்போனவரின் சடலம் நேற்று சனிக்கிழமை மீட்கப்பட்டது.

வடமராட்சி - கற்கோவளத்திலிருந்து தொழிலுக்காக கடலுக்குச் மீனவர்கள் ஆழ்கடல் பகுதியில் சடலம் மிதப்பதைக் கண்டு, அதனை மீட்டு நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் கரைக்குக் கொண்டு வந்தனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட சடலம் கடந்த 17ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வல்லிபுர ஆழ்வார்

15

## ஊரடங்கால் அச்சம் வேண்டாம்!

கொழும்பு, செப். 22

நாட்டில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் பொதுமக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை எனத் தேசிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் தேசிய மக்கள் சக்தி விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்படுவது முற்றி லும் அமைதியை நிலைநாட்டும் நோக்கத்திற்காகவே என எதிர்பார்க்கிறோம்.

15


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதித் தேர்தல் 2024 - தபால் மூல வாக்களிப்பு முடிவுகள்

தேர்தல் மாவட்டம் : வன்னி

| | |
|---|---|
| சஜித் பிரேமதாஸ | 4,899 |
| ரணில் விக்கிரமசிங்க | 4,257 |
| அநுரகுமார திஸநாயக்க | 2,092 |
| அரியநேத்திரன் | 1,160 |
| நாமல் ராஜபக்ஷ | 68 |
| பதியப்பட்ட வாக்குகள் | **13,389** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **13,108** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **344** |

தேர்தல் மாவட்டம் : திருகோணமலை

| | |
|---|---|
| அநுரகுமார திஸநாயக்க | 5,480 |
| சஜித் பிரேமதாஸ | 4,597 |
| ரணில் விக்கிரமசிங்க | 3,630 |
| அரியநேத்திரன் | 431 |
| நாமல் ராஜபக்ஷ | 129 |
| பதியப்பட்ட வாக்குகள் | **14,964** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **14,780** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **317** |

தேர்தல் மாவட்டம் : மட்டக்களப்பு

| | |
|---|---|
| ரணில் விக்கிரமசிங்க | 5,967 |
| சஜித் பிரேமதாஸ | 3,205 |
| அநுரகுமார திஸநாயக்க | 2,479 |
| அரியநேத்திரன் | 901 |
| நாமல் ராஜபக்ஷ | 19 |
| பதியப்பட்ட வாக்குகள் | **13,116** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **12,939** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **235** |

தேர்தல் மாவட்டம் : திகாமடுல்ல (அம்பாறை)

| | |
|---|---|
| அநுரகுமார திஸநாயக்க | 11,120 |
| சஜித் பிரேமதாஸ | 7,368 |
| ரணில் விக்கிரமசிங்க | 6,719 |
| நாமல் ராஜபக்ஷ | 318 |
| அரியநேத்திரன் | 233 |
| பதியப்பட்ட வாக்குகள் | **26,778** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **26,557** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **491** |

தேர்தல் மாவட்டம் : கொழும்பு

| | |
|---|---|
| அநுரகுமார திஸநாயக்க | 20,854 |
| ரணில் விக்கிரமசிங்க | 7,645 |
| சஜித் பிரேமதாஸ | 4,080 |
| நாமல் ராஜபக்ஷ | 561 |
| அரியநேத்திரன் | 63 |
| பதியப்பட்ட வாக்குகள் | **35,636** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **35,229** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **1,059** |

தேர்தல் மாவட்டம் : நுவரெலியா

| | |
|---|---|
| அநுரகுமார திஸநாயக்க | 8,946 |
| ரணில் விக்கிரமசிங்க | 5,087 |
| சஜித் பிரேமதாஸ | 4,334 |
| நாமல் ராஜபக்ஷ | 308 |
| அரியநேத்திரன் | 13 |
| பதியப்பட்ட வாக்குகள் | **19,727** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **19,511** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **536** |

தேர்தல் மாவட்டம் : மொனராகலை

| | |
|---|---|
| அநுரகுமார திஸநாயக்க | 14,050 |
| சஜித் பிரேமதாஸ | 5,733 |
| ரணில் விக்கிரமசிங்க | 3,401 |
| நாமல் ராஜபக்ஷ | 470 |
| அரியநேத்திரன் | 04 |
| பதியப்பட்ட வாக்குகள் | **24,797** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **24,544** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **555** |

தேர்தல் மாவட்டம் : மாத்தளை

| | |
|---|---|
| அநுரகுமார திஸநாயக்க | 12,186 |
| ரணில் விக்கிரமசிங்க | 4,243 |
| சஜித் பிரேமதாஸ | 3,816 |
| நாமல் ராஜபக்ஷ | 372 |
| அரியநேத்திரன் | 03 |
| பதியப்பட்ட வாக்குகள் | **21,667** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **21,412** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **484** |

தேர்தல் மாவட்டம் : கேகாலை

| | |
|---|---|
| அநுரகுமார திஸநாயக்க | 20,062 |
| ரணில் விக்கிரமசிங்க | 7,229 |
| சஜித் பிரேமதாஸ | 5,604 |
| நாமல் ராஜபக்ஷ | 482 |
| அரியநேத்திரன் | 08 |
| பதியப்பட்ட வாக்குகள் | **35,103** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **34,798** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **894** |

தேர்தல் மாவட்டம் : இரத்தினபுரி

| | |
|---|---|
| அநுரகுமார திஸநாயக்க | 19,185 |
| ரணில் விக்கிரமசிங்க | 6,641 |
| சஜித் பிரேமதாஸ | 4,675 |
| நாமல் ராஜபக்ஷ | 500 |
| அரியநேத்திரன் | 03 |
| பதியப்பட்ட வாக்குகள் | **32,530** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **32,179** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **640** |

தேர்தல் மாவட்டம் : மாத்தறை

| | |
|---|---|
| அநுரகுமார திஸநாயக்க | 19,712 |
| ரணில் விக்கிரமசிங்க | 5,088 |
| சஜித் பிரேமதாஸ | 4,041 |
| நாமல் ராஜபக்ஷ | 543 |
| அரியநேத்திரன் | 01 |
| பதியப்பட்ட வாக்குகள் | **30,882** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **30,497** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **593** |

தேர்தல் மாவட்டம் : அநுராதபுரம்

| | |
|---|---|
| அநுரகுமார திஸநாயக்க | 32,750 |
| சஜித் பிரேமதாஸ | 10,956 |
| ரணில் விக்கிரமசிங்க | 8,218 |
| நாமல் ராஜபக்ஷ | 783 |
| அரியநேத்திரன் | 13 |
| பதியப்பட்ட வாக்குகள் | **55,191** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **54,484** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **1,000** |

தேர்தல் மாவட்டம் : பொலநறுவை

| | |
|---|---|
| அநுரகுமார திஸநாயக்க | 11,768 |
| சஜித் பிரேமதாஸ | 4,120 |
| ரணில் விக்கிரமசிங்க | 2,762 |
| நாமல் ராஜபக்ஷ | 188 |
| அரியநேத்திரன் | 06 |
| பதியப்பட்ட வாக்குகள் | **19,858** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **19,583** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **372** |

தேர்தல் மாவட்டம் : அம்பாந்தோட்டை

| | |
|---|---|
| அநுரகுமார திஸநாயக்க | 14,482 |
| சஜித் பிரேமதாஸ | 3,397 |
| ரணில் விக்கிரமசிங்க | 2,502 |
| நாமல் ராஜபக்ஷ | 819 |
| அரியநேத்திரன் | 05 |
| பதியப்பட்ட வாக்குகள் | **22,167** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **21,998** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **449** |

தேர்தல் மாவட்டம் : காலி

| | |
|---|---|
| அநுரகுமார திஸநாயக்க | 25,892 |
| ரணில் விக்கிரமசிங்க | 7,226 |
| சஜித் பிரேமதாஸ | 5,338 |
| நாமல் ராஜபக்ஷ | 863 |
| அரியநேத்திரன் | 03 |
| பதியப்பட்ட வாக்குகள் | **41,437** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **41,067** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **927** |

## மக்கள் அளிக்கும் தீர்ப்பு திருப்புமுனையாக அமையும்

### சுமந்திரன் எம். பி. தெரிவிப்பு

வடமராட்சி, செப். 23

ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் அளிக்கும் தீர்ப்பு திருப்பு முனையாக அமையும் என்று இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.



நேற்றைய தினம் வடமராட்சி - குடத்தனையில் தனது வாக்கை செலுத்திய பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், நாட்டின் தலைமையைத் தீர்மானிக்கின்ற பொறுப்பு மக்களிடத்தில் இருக்கின்றது. ஆகவே மக்கள் சரியான தீர்ப்பை அளிப்பார்கள் என்று எதிர்பார்ப்புள்ளது.

அத்துடன், இந்த ஜனாதிபதி தேர்தல் சரியானதொரு திருப்பு முனையாக இருக்கும் என்ற நம்பிக்கையும் உள்ளது. நாடு பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கி அல்லோலகல்லோலப்பட்டிருந்த நிலையில் இரண்டு வருடங்களுக்குப் பின்னர் மக்களின் அபிப்பிராயம் கோரப்படுகின்றது. ஆகவே, மக்கள் தமது வலுவான நிலைப்பாட்டை வெளிப்படுத்துவார்கள் என்று எதிர்பார்க்கின்றோம்.

தேர்தலில் ஏற்படுகின்ற மாற்றமானது, நாட்டிக்கும், மக்களுக்கும் சிறந்தவொரு வழியைக் காண்பிக்கும் என்று நான் நம்புகின்றேன் - என்றார். (ஐ)

## காலை 6 மணி வரை அமுலிலிருந்த ஊரடங்கு!

கொழும்பு, செப். 26

இன்று காலை 6 மணி வரை ஊரடங்கு சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

நேற்று சனிக்கிழமை இரவு 10 மணி தொடக்கம் காலை 6 மணி வரை இந்த ஊரடங்கு உத்தரவு நடைமுறையில் இருந்தது.

பொதுமக்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு ஜனாதிபதியின் உத்தரவுக்கு அமைய பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு ஊரடங்கு உத்தரவை பிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இலங்கை இன்னமும் துடிப்பான ஜனநாயக நாடாகவே உள்ளது!

### சாலிய பீரிஸ் சுட்டிக்காட்டு

கொழும்பு, செப். 23

ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளுக்காக காத்திருக்கும் இவ்வேளையில், அனைத்துக் குழப்பங்களுக்கும் மத்தியில் இலங்கை இன்னமும் ஒரு துடிப்பான ஜனநாயக நாடாகத் திகழ்வதை நாம் நிச்சயமாகக் கொண்டாட வேண்டும். பல வருடகால தொடர் நெருக்கடிகளின் பின்னரும் கூட எம்மால் தேர்தலில் வாக்களிப்பதற்கும், அதனூடாக தலைமைத்துவத்தை மாற்றுவதற்கும் முடிகிறது என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவர் சாலிய பீரிஸ் தெரிவித்துள்ளார்.

மேலும், "30 வருடகால யுத்தம், இரண்டு கலவரங்கள், தீவிர பொருளாதார நெருக்கடி மற்றும் ஒரு வலுவான ஆட்சியைக் கவிழ்ப்பதற்குக் காரணமாக அமைந்த "அறகலய" போராட்டம் ஆகியவற்றின் பின்னரும் கூட எம்மால் தேர்தலில் வாக்களிப்பதற்கும், அதனூடாக சிலவேளைகளில் தலைமைத்துவத்தை மாற்றுவதற்கும் முடிகிறது. 21 ஆம் நூற்றாண்டில் உலகத்தில் வாழும் சுமார் அரைவாசி மக்களுக்கு இந்த உரிமை இல்லை என்பதை நாம் மறந்துவிடாதிருப்போம்" - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு

# 9 மாகாணங்களிலும் அதியுச்ச பாதுகாப்பு

கொழும்பு, செப். 22

**9ஆவது ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு 9 மாகாணங்களிலும் விசேட கண்காணிப்பு நிலையங்கள் ஸ்தாபிக்கப்பட்டு அதி உச்ச பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.**

நாடளாவிய ரீதியில் ஸ்தாபிக்கப்பட்ட வாக்களிப்பு நிலையங்களுக்கு அண்மித்த பகுதிகளில் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

தேர்தல் பாதுகாப்பு கடமைகளுக்காக பொலிஸார் உள்ளிட்ட 80, 000 பாதுகாப்பு தரப்பினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மேலும், 3,000 இற்கும் அதிகமான இராணுவத்தினரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அதேவேளை, அனைத்து வாக்களிப்பு நிலையங்களுக்கும் தலா 2 பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப் பட்டனர்.

வாக்குப் பெட்டிகளைக் கொண்டு செல்வதற்காகவும் வாக்கு எண்ணும் நிலையங்களுக்கும் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.



அத்துடன் பொலிஸ் தலைமையகத்தில் விசேட கண்காணிப்பு மையம் நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன் 9 மாகாணங்களிலும் விசேட கண்காணிப்பு நிலையங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன- என்றார். (எ)

## கூரிய ஆயுதத்தால் தாக்கி இளம் பெண் படுகொலை

மிரிஹான, செப். 22

மிரிஹான பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெங்கிரிவத்த பகுதியிலுள்ள வீடொன்றில் இளம் பெண் ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டார்.

பெங்கிரிவத்த - சன்தானம் பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 35 வயது பெண்ணே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டார்.

குறித்த வீட்டில் நீண்ட நாட்களாக சாரதியாக பணியாற்றி வந்த ஒருவரே இந்தக் கொலையை செய்ததாக சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை, சந்தேக நபரை கைது செய்வதற்கான விசாரணைகளை மிரிஹான பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## பூஸா சிறைச்சாலையில் திடீர் சோதனை

கண்டி, செப். 22

கனேமுல்ல சஞ்சீவவின் சிறைக்கூடத்தில் நேற்றுக்காலை திடீரென சோதனை நடத்தப்பட்டது.

பூஸா உயர் பாதுகாப்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியாக கருதப்படும் கனேமுல்ல சஞ்சீவவின் சிறைக்கூடம் விசேட அதிரடிப் படை அதிகாரிகளால் அவசர பரிசோதனைக்கு உட்படுத்தப் பட்டுள்ளது.

இதன்போது, கனேமுல்ல சஞ்சீவ தரையில் மறைத்து வைத்திருந்த நவீன கையடக்கத் தொலைபேசியை தரையில் அடித்து சேதப்படுத்தியுள்ளதாக தெரியவருகிறது.

எவ்வாறாயினும், கையடக்க தொலைபேசியை அதிரடிப் படை அதிகாரிகள் கைப்பற்றிய போதிலும் அதின் சிம் அட்டை கிடைக்கவில்லை என தெரிவித்தனர். (எ)



## யாழில் வயோதிப பெண் தீயில் எரிந்து உயிரிழப்பு

விபத்தா? கொலையா? என்று விசாரணை

யாழ்ப்பாணம், செப். 22

யாழ்ப்பாணம், கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நீர்வேலிப் பகுதியில் தனிமையில் வசித்து வந்த 65 வயதுடைய பெண்ணின் வீடு தீக்கிரையானது. இதனால் வீட்டிலிருந்த பெண்ணும் எரிந்து உயிரிழந்தார்.

வீட்டில் இருந்த ஹாஸ் சிலிண்டர்கள் வெளியே தூக்கி வீசப்பட்டுள்ள தீயில் எரிந்துள்ளன. அத்துடன் வீட்டின் வாசலிலே சமையலுக்கு பயன்படுத்தப்படும் மிளகாய் தூள் வீசப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவினர் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர். அத்தோடு, தடயவியல் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இந்த வீட்டுக்கு யாராவது தீ வைத்தார்களா? அல்லது ஹாஸ் சிலிண்டர்கள் வெடித்து வீடு தீக்கிரையானதா? என்ற கோணத்திலும் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

## அமைதியான முறையில் நேற்று நாடளாவிய ரீதியில் வாக்களிப்பு

பவ்ரல் அமைப்பின் ரோஹண ஹெட்டியாராச்சி

கொழும்பு, செப். 22

நாடளாவிய ரீதியில் அமைதியான முறையில் வாக்களிப்பு இடம்பெற்றதாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் 9ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான வாக்களிப்பு நேற்றுச் சனிக்கிழமை காலை 7.00 மணிக்கு ஆரம்பித்தது.

இந்த நிலையில், நாடளாவிய ரீதியில் 35 குற்றச் செயல்கள் இடம்பெற்ற நிலையில் பாரதூரமான சம்பவங்கள் எதுவும் பதிவாகவில்லை என்றும் ரோஹண கூறினார். (எ)

# எரிபொருள் விநியோகம் அத்தியாவசிய சேவை

விசேட வர்த்தமானி வெளியானது

கொழும்பு, செப். 22

பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் எரிபொருள் விநியோகம் உள்ளிட்ட பல சேவைகளை அத்தியாவசிய சேவையாக்கும் விசேட வர்த்தமானி அறிவித்தலை வெளியிட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதன்படி, மின்சார வழங்கல் தொடர்பான சகல சேவைகளும், பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் எரிபொருள் விநியோகம் - சேவைகள் என்பன இவ்வாறு அத்தியாவசிய சேவைகளாக மாற்றப்பட்டுள்ளன.

இந்த சேவைகளை அத்தியாவசிய சேவைகளாக மாற்றும் வர்த்தமானி அறிவித்தலை ஜனாதிபதியின் செயலாளர் ஈ. எம். எஸ். பி. ஏகநாயக்க நேற்று முன்தினம் வெளியிட்டார். (எ)

## ரூ. 5,000 இலஞ்சம் பெற்ற பொலிஸ் சார்ஜன்ட் கைது

கொழும்பு, செப். 22

5,000 ரூபாய் இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டின் பேரில் பொத்துஹெர பொலிஸ் நிலையத்தின் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

சட்டவிரோத மதுபான விற்பனை தொடர்பில் வழக்குப் பதிவு செய்யப்பட்ட நபரின் விவரங்களை உள்ளடக்காமல் பொலிஸ் அறிக்கையை வழங்குவதற்காகவே இந்த இலஞ்ச தொகை கோரப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

இதனடிப்படையில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு கிடைத்த முறைப்பாட்டின் பிரகாரம் பொத்துஹெர பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக இலஞ்சப் பணத்தை பெற்றுக்கொண்ட போதே சந்தேகத்துக்குரிய பொலிஸ் சார்ஜன்ட் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் பொல்கஹவெல நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளார். (எ)

## உள்நாட்டு துப்பாக்கியுடன் 25 வயது இளைஞன் கைது!

அம்பாந்தோட்டை, செப். 22

அம்பாந்தோட்டை உடவலவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மஹஆர பிரசேத்தில் வைத்து உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அறிக்கை ஒன்றை வெளியிட்டு பொலிஸ் ஊடகப்பிரிவு [illegible] உடவலவ பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கு அமைவாக சந்தேகநபர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கைதான சந்தேகநபர் 25 வயதுடைய உடவலவ பிரதேசத்தைச் சேர்ந்தவர் என தெரியவருகிறது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ)

## “பாராளுமன்றம் கலைக்கப்படாது”



வவுனியா, செப். 22

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வெல்லும் பட்சத்தில் ஒன்றரை வருடங்களுக்கு பாராளுமன்றம் கலைக்கப்படாது என்பதில் நம்பிக்கையுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் திலீபன் தெரிவித்தார்.

வவுனியா அண்ணாநகர் பரமேஸ்வரா வித்தியாலயத்தில் தனது வாக்கை பதிவு செய்ததன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளிடும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.


“மக்கள் அதிகளவில் வாக்கு அளிப்பதில் ஆர்வம் கொண்டு செயல்படுவதை காணக் கூடியதாக இருந்தது. அந்த வகையில் ரணில் விக்கிரமசிங்க வெல்வதற்கான வாய்ப்பு அதிகமாகவேவுள்ளது.

ரணில் விக்கிரமசிங்க வெல்லும் பட்சத்தில் பாராளுமன்றம் ஒன்றரை வருடங்களுக்கு கலைக்கப்படாது”- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பில் முன்னாள் எம். பி. ஜெயானந்தமூர்த்திமீது தாக்குதல்

## பிள்ளையான் தரப்பினரில் சந்தேகம்



வாழைச்சேனை, செப். 22

**மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஐக்கிய மக்கள் சக்தியின் இணைப்பாளருமான ஜெயானந்தமூர்த்தியின் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.**

வாழைச்சேனையில் உள்ள அவரது வீட்டுக்கு நேற்று முன்தினம் இரவு சென்ற இனந்தெரியாத நபர்கள் அவரின் வீட்டின் மீது தாக்குதல்களை முன்னெடுத்ததுடன் அங்கு வைக்கப்பட்டிருந்த பதாகைகளும் கிழிக்கப்பட்டுள்ளன.

இந்தத் தாக்குதல் நடவடிக்கையை மூவரடங்கிய குழுவினர் முன்னெடுத்ததாக தாக்குதலுக்குள்ளான ஜெயானந்தமூர்த்தி தெரிவித்தார்.

தாக்குதலுக்குள்ளானவர் வாழைச்சேனை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு வழங்கியதாலேயே தன்மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் ஜெயானந்தமூர்த்தி கூறினார். பிள்ளையானின் ஆதரவாளர்களே தன்னைத் தாக்கியிருக்கக்கூடும் எனவும் அவர் சந்தேகம் வெளியிட்டுள்ளார். (எ)

# வாக்குச்சீட்டை படம் எடுத்த இராணுவச் சிப்பாய் கைது!

காலி, செப். 22

காலி, மித்தியகொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தெல்வத்த சுமணாராம விகாரையின் வாக்களிப்பு நிலையத்தில் நேற்றுக் காலை வாக்களிப்பில் ஈடுபட்ட நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹிக்கடுவ தெல்வத்த போயகொட வீதியைச் சேர்ந்த 44 வயதுடைய இராணுவச் சிப்பாய் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

வாக்களிப்பு நிலையத்துக்கு நேற்றுக் காலை வந்த அவர், தனது வாக்குச்சீட்டை பெற்றுக் கொண்டு வாக்களித்த பின்னர், அதனை தொலைபேசியில் படம் எடுக்கும் போது பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (எ)

# மதுபோதையில் தேர்தல் பணிகள் வான் சாரதி பொலிஸாரால் கைது

கொழும்பு, செப். 22

வாக்களிப்பு நிலையத்துக்கு பணியாளர்களை அழைத்துச் சென்ற வான் சாரதி ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலுக்காக வாக்குச் சீட்டுகள், வாக்குப் பெட்டிகள் மற்றும் பணியாளர்களை தெரணியகல பிரதேசத்தில் உள்ள வாக்களிப்பு நிலையத்துக்கு கொண்டு சென்ற வான் சாரதியே நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, வாக்குச் சீட்டுகள், வாக்குப்பெட்டிகள் மற்றும் பணியாளர்களை வேறு வாகனத்தில் கொண்டு செல்ல அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தனர். (எ)



# கல்லடி அம்மன் கோவில் முற்றாக தீக்கிரையானது

மட்டக்களப்பு, செப். 22

மட்டக்களப்பு கல்லடி - உப்போடை பேச்சி அம்மன் ஆலயம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு முற்றாக தீக்கிரையானது.

கல்லடி உப்போடையில் அமைந்துள்ள சிறப்பு மிக்க பேச்சி அம்மன் ஆலயத்தில் வெள்ளிக்கிழமை பூஜை நடைபெற்ற நிலையில் பூஜைக்காக ஏற்றப்பட்டிருந்த விளக்கு ஆலய ஓலை குடிலில் பட்டு தீ பிடித்து எரிந்திருக்கலாம் என கூறப்படுகின்றது.

தீ பெரும் சுவாலையாக பிரகாசமாக எரியத் தொடங்கியதையடுத்து, அந்த பகுதி பொது மக்கள் தீயணைப்புப் படையினர் ஒன்றிணைந்து தீயை சில மணி நேரத்தில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். இருந்த போதும் கோவில் மூலஸ்தானம் முற்றாக எரிந்து சாம்பலாகியது

பேச்சி அம்மனின் சிலை ஆரம்ப காலந்தொட்டு ஓலைக் குடிலில் வைக்கப்பட்டு மிகவும் சிறப்பு வாய்ந்த தெய்வமாக பிரதேச மக்களால் போற்றப்படும் நிலையில், தீ பற்றியதை கேள்வியுற்ற அந்த பிரதேசத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் படையெடுத்து கோவிலை சூழ்ந்து கொண்டதையடுத்து அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டதுடன் கோவில் மூலஸ்தானம் தீப்பற்றியதை கண்ட பல பக்தர்களும் கத்தி கதறி அழுது புலம்பினர். (எ)

# தேர்தல் பணிகளை பார்வையிட்ட ஐரோப்பிய கண்காணிப்பாளர்கள்

வவுனியா, செப். 22

வவுனியாவில் நேற்று விறுவிறுப்பாக நடைபெற்ற தேர்தல் வாக்களிப்பு பணிகளை ஐரோப்பிய ஒன்றிய கண்காணிப்பாளர்கள் பார்வையிட்டனர்.

2024 ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு வாக்களிப்பு நடவடிக்கைகள் நேற்று நாடு முழுவதும் நடைபெற்றது.

வவுனியாவில் காலை முதல் மக்கள் ஆர்வத்துடன் வாக்களிப்பு நிலையங்களுக்கு சென்று வாக்களித்தனர்.



இதேவேளை, ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பு குழுவினரும் வவுனியாவில் கண்காணிப்பில் ஈடுபட்டனர். (எ)

# ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் நேற்றுவரை 5,551 முறைப்பாடுகள்

## தேர்தல்கள் ஆணைக்குழு அறிக்கை

ශ්‍රී ලංකා මැතිවරණ කොමිෂන් සභාව
இலங்கை தேர்தல் ஆணைக்குழு
Election Commission of Sri Lanka

கொழும்பு, செப். 22

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான முறைப்பாடுகளின் எண்ணிக்கை 5, 551 ஆக அதிகரித்துள்ளது என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிக்கை வெளியிட்டுள்ளது.

இதேவேளை, நேற்றுக் காலை 9 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணித்தியாலங்களில் மேலும் 337 தேர்தல் முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

இதில், தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பில் 336 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

இதற்கமைய, இதுவரை பதிவாகியுள்ள மொத்த முறைப்பாடுகளில் 4, 929 முறைப்பாடுகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (எ)

# கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து டொன் பிரியசாத் திருப்பி அனுப்பப்பட்டார்

கொழும்பு, செப். 22

ராஜபக்ஷக்களும் அவர்களுக்கு ஆதரவான தரப்பினரும் நாட்டை விட்டு வெளியேறி வருகின்றனர். இந்த நிலையில், டுபாய் செல்வதற்காக கட்டுநாயக்கா விமான நிலையத்துக்கு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சென்ற டொன் பிரியசாத் அங்கிருந்து திருப்பி அனுப்பப்பட்டுள்ளார்.

நீதிமன்றம் விதித்த வெளிநாட்டு பயணத் தடை காரணமாக கட்டுநாயக்கா விமான நிலைய குடிவரவு திணைக்கள அதிகாரிகளால் திருப்பி அனுப்பப்பட்டார்.

டொன் பிரியசாத் என அழைக்கப்படும் லியனகே அபேரத்ன சுரேஷ் பிரியசாத் நேற்று முன்தினம் இரவு 8. 35 மணிக்கு டுபாய்க்கு செல்லவிருந்த எமிரேட்ஸ் விமானத்தில் பயணிப்பதற்காக கட்டுநாயக்கா விமான நிலையத்துக்கு சென்றிருந்தார்.



ஆனால், அவருக்கு எதிராக நீதிமன்றம் விதித்த வெளிநாட்டுப் பயணத் தடை காரணமாக, அவர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் குடிவரவு குடியகல்வு திணைக்கள அதிகாரிகளால் திருப்பி அனுப்பப்பட்டுள்ளார்.

கடந்த 2022 ஆம் ஆண்டு மே மாதம் 9 ஆம் திகதி கொழும்பு காலி முகத்திடலில் இடம்பெற்ற அமைதிப் போராட்டத்தின் மீது தாக்குதல் நடத்திய வழக்கில் 6 ஆவது பிரதிவாதியாக டொன் பிரியசாத்தின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. ராஜபக்ஷக்களின் ஆட்சிக்காலத்தில் டொன் பிரியசாத் பல்வேறு இனமுரண்பாட்டு சம்பவங்களில் ஈடுபட்டார். இவருக்கு எதிராக பல முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
22.09.2024 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், புரட்டாதி 06

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# புவிசார் அரசியல் நெருக்கடி

ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளை தொடர்ந்து இதுவரையான இலங்கையின் அரசியல் நெருக்கடி புதிய வடிவமொன்றை எடுக்கக்கூடுமா? இந்தக் கேள்வி எப்போதுமில்லாதளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக இருக்கின்றது.

2009இல் யுத்தம் முடிவுற்றதைத் தொடர்ந்து இலங்கைத் தீவின்மீது சீனா அதிக கரிசனையை காண்பித்தது. விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் வெற்றியை மிகவும் கச்சிதமாகப் பயன்படுத்திக் கொண்ட சீனா ராஜபக்ஷ குடும்பத்தின் அதிகார போதை மற்றும் ஊழல் நாட்டத்தை அதன் மூலோபாய நகர்வுகளுக்கான முதலீடாகப் பயன்படுத்திக்கொண்டது. சிறிய நாடுகளை கையாளும் சீனாவின் அணுகுமுறை பிரபல்யமானது - அதாவது, சிறிய நாடுகளின் இயலாமையே சீனாவுக்கான இலகு முதலீடாகும்.

அந்த அடிப்படையில், மகிந்த ராஜபக்ஷவை சீனா முழுமையாக பயன்படுத்திக் கொண்டது. இறுதி யுத்தத்தின்போதான மனித உரிமைகள் மீறல் தொடர்பில் அமெரிக்கா தலைமையிலான மேற்குலகம் ராஜபக்ஷ அரசின் மீது தொடர்ச்சியாக அழுத்தங்களை பிரயோகித்து வந்தது. ஆனால், ராஜபக்ஷ அவ்வாறான அழுத்தங்களை கண்டுகொள்ளவில்லை - மாறாக, மேற்குலகத்துடன் மோதும் போக்கையே கடைப்பிடித்தது. இந்த மோதல் போக்கு சீனாவைப் பொறுத்தவரையில் இனிப்பானது. மேற்குலகுடன் மோதும் அரசாங்கங்களே சீனாவின் உற்ற நண்பர்களாவர்.

2015இல் ஏற்பட்ட ஆட்சி மாற்றம் ஒப்பீட்டடிப்படையில் சீனாவுக்கு நெருக்கடியைக் கொடுக்கக்கூடிய அரசியல் சூழலை தோற்றுவித்தது. "புதுச் செருப்பு கடிக்கும் என்பது போல்", மைத்திரிபால அரசாங்கம் சீனாவின் முதலீடுகளை மீள்பரிசீலனை செய்யப் போவதாகக் கூறியபோதிலும்கூட, இறுதியில் எதுவும் நடைபெறவில்லை. இறுதியில், ரணில் விக்கிரமசிங்க, அம்பாந்தோட்டை துறைமுகத்தை 99 வருடக் குத்தகைக்கு சீனாவுக்கு வழங்கினார். இந்தியாவின் பிராந்திய பாதுகாப்பு கரிசனைகளை ரணில் பொருட்படுத்தவில்லை என்னும் குற்றச்சாட்டும் எழுந்தது. ஆனால், சீனா ஒரு மூலோபாய சொத்தை முற்றிலுமாக தன்வசப்படுத்துவதில் வெற்றிபெற்றது. இதனை இந்திய தரப்புகள் மறுத்தாலும்கூட, உண்மை அதுதான்.

இவ்வாறானதொரு பின்புலத்தில் நோக்கினால் நாடு அநுரவின் வசமானால் நிலைமைகளில் எதிர்பாராத மாற்றமும் ஏற்படலாம். அநுரவின் இந்திய பயணம் அவர்களின் அரசியல் அணுகுமுறைகளில் மாற்றங்களை காண்பித்தாலும்கூட, அதிகாரம் கிடைத்த பின்னர் எவ்வாறு நடந்துகொள்வார்கள் என்பதை ஊகிப்பது கடினமானது. அதிகாரம் ஒரு போதை - அது தலைக்கேறும்போது எதுவும் நிகழலாம். அநுர போன்ற ஒருவர் எவருமே எதிர்பாராதவாறு நன்மைகளையும் செய்யக்கூடும் ஒருவேளை தலைகீழான விடயங்களும் நடக்கலாம்.

அநுரவிடம் நல்ல மாற்றங்கள் தெரிகின்றன. அவர் பழைய ஜே. வி. பியை பின்பற்றவில்லை. ஆனால், அவரின் தலைமையின் கீழுள்ளவர்கள் அனைவரும் அவ்வாறு இருப்பார்களா என்பது கேள்விக்குறியாகும். சந்திரிகா குமாரதுங்க அதிகாரத்துக்கு வரும்போது அவர் தொடர்பில் பலவாறான எதிர்பார்ப்புகள் இருந்தன. தமிழ் மக்கள் மத்தியிலும் அவருக்கு பலமான வரவேற்பிருந்தது. ஆனால், ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு பின்னர் அவரும் அதிகாரத்தின் முகமாக மாறிப்போனார்.

"சமாதானம் என்றால் சமாதானம் போர் என்றால் போர்", என்னும் ஆவேசத்துடன் வடக்கை நோக்கி படையை நகர்த்தினார். அவர் நல்லவராக இருக்கலாம் ஆனால், அதிகாரமுள்ள அந்தக் கதிரையில் இருக்கின்றபோது, அவரும் பத்தோடு பதினொன்றாவே மாறிப்போனார். அநுரவுக்கும் இது நிகழலாம். ஒருவேளை, அநுரவின் அணுகுமுறையில் அல்லது அவரால் கட்டுப்படுத்த முடியாத அணியொன்று அதிகாரத்தை கைவசப்படுத்தினால் இலங்கை இதுவரை காணாத புவிசார் அரசியல் நெருக்கடியொன்றை காணக்கூடும்.

# வாக்காளர்களுக்கு பெரும் சிரமத்தை ஏற்படுத்திய வாக்களிப்பு நிலையம்



நுவரெலியா, செப். 22

நுவரெலியா - மஸ்கெலியா தேர்தல் தொகுதியில் நோர்வூட் நியுவெளி இலக்கம் 205 வாக்களிப்பு நிலையமானது வாக்காளர்களுக்கு பல விதங்களிலும் அசௌகரியத்தை ஏற்படுத்திய ஒன்றாக விளங்கியுள்ளது. நியுவெளி தோட்டத்தின் பழைய தேயிலை தொழிற்சாலையே இந்தப் பகுதியின் வாக்களிப்பு நிலையமாக தெரிவு செய்யப்பட்டிருந்தது.

தொழிற்சாலையின் மேற்பகுதியில் வாக்களிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தாலும் இரும்பிலான படிக்கட்டுகளில் வாக்காளர்கள் ஏறுவதற்கு மிகவும் சிரமப்பட்டதையும், வயோதிபர்கள், பெண்கள் உள்ளிட்ட வாக்காளர்கள் சிலர் இப்படிக்கட்டுகளில் ஏற முடியாமல் திரும்பிச் சென்றதையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

மேலும், வாக்களிப்பு நிலையத்தின் உட்புறம் மிக குறுகியதாக இருந்ததால் தாம் பணிகளை மேற்கொள்ள சிரமங்களை எதிர்கொண்டதாக குறித்த வாக்களிப்பு நிலைய சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர் உட்பட பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்ட பொலிஸாரும் தெரிவித்தனர். (எ)

# சுபீட்சத்துடன் வாழக்கூடிய நாட்டை இலக்காக கொண்டு வாக்களித்தோம்

## ரணிலுக்கு ஆதரவு வழங்கிய அமைச்சர்கள்

கொழும்பு, செப். 22

அனைவரும் சுபீட்சத்துடன் வாழக்கூடியதொரு நாட்டை இலக்காகக் கொண்டு ஆட்சி நிர்வாகத்தில் நீண்டகால அனுபவத்தையும், பொருளாதார ரீதியான தூரநோக்கு சிந்தனையையும் கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவுக்கு தாம் வாக்களித்ததாக அவருக்கு ஆதரவளிக்கும் அமைச்சர்கள் தெரிவித்துள்ளனர்.

இதன்படி அடுத்த 5 வருடங்களுக்கு எமது நாட்டின் தலைவரைத் தெரிவு செய்வதற்கான வாய்ப்பு எமக்குக் கிடைத்திருக்கின்றது. எமது பொருளாதாரத்தை வலுப்படுத்தக்கூடிய, பொருளாதார மறுசீரமைப்புக்களைத் தொடர்ந்து முன்னெடுக்கக்கூடிய தலைவரையே நாம் தெரிவு செய்ய வேண்டும். மிகவும் அவசியமான தருணங்களில் மிகக் கடினமான தீர்மானங்களை மேற்கொள்ளக்கூடிய தலைவரையே நாம் தெரிவு செய்யவேண்டும். எமது நாட்டை வழிநடத்தக்கூடிய அனுபவமுடைய தலைவரையே நாம் தெரிவு செய்ய வேண்டும். எந்தவொரு சூழ்நிலையையும் நெருக்கடியையும் அமைதியாகக் கையாளக்கூடிய தலைவரையே நாம் தெரிவு செய்யவேண்டும்.


இதற்கு முன்னர் சாதித்துக் காட்டிய, அனைத்துப் பிரஜைகளையும் சமத்துவமாக நடத்தக்கூடிய, எமது நாட்டை மீண்டுமொரு நெருக்கடியை நோக்கிக் கொண்டு செல்லாத, மாறாக நம்மனைவரையும் சிறந்த எதிர்காலத்தை நோக்கி வழிநடத்திச் செல்லக்கூடிய தலைவரையே நாம் தெரிவு செய்யவேண்டும்.

இதன்படி அடுத்த 5 வருடங்களுக்கு எமது நாட்டை வழிநடத்திச் செல்வதற்காக நாம் ரணில் விக்கிரமசிங்கவுக்கே வாக்களித்தோம் என்று மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க,

நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் ஜீவன் தொண்டமான் ஆகியோர் தமது

"எக்ஸ்" வலைத்தளப் பதிவில் குறிப்பிட்டுள்ளனர். (எ)


# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விக்கு அழகு கசடற நடத்தல்

என். மாதவன்



ஆசிரியரும் கடவுளும் உங்கள் முன்னால் தோன்றினால் நீங்கள் யாரை வணங்குவீர்கள் என்றால் நான் ஆசிரியரைத்தான் வணங்குவேன் ஏனென்றால் ஆசிரியர்தான் எனக்கு கடவுளையே அறிமுகப்படுத்தியவர் என்றார் கபீர்தாசர்.

அண்மையில் பங்கேற்ற ஒரு கலந்துரையாடலில், நாம் யாரிடமிருந்து எல்லாம் கற்க இயலும் என்ற கேள்வியை எழுப்பினேன். அம்மா, அப்பா, ஆசிரியர், நண்பன், சமூகம், சமூக ஊடகம், தொலைக்காட்சி, கூகுள், எதிரி என பலவகையான விடைகள் வந்தன.

கற்றல் என்பது எல்லா இடங்களிலும் எல்லா நேரங்களிலும் நடைபெறவல்லது. வகுப்பறையில் ஆசிரியர் பகிரும் விஷயங்கள் பிடிபடாதபோது மதிய உணவு நேரத்தில் நண்பர்களுடனான பகிர்தல் எளிதில் விளக்கிவிடும்.

இளையவயதில் குழந்தைகளுக்கு எது சரி, எது தவறு என குடும்பம் போதித்துவிட்டால் வாழ்வின் எஞ்சிய பகுதியில் அக்குழந்தைகள் நேர்வழியில், நேர்மறை சிந்தனையோடு வாழ்வது எளிதாகிவிடும்.

சமூகத்தில் நாம் சந்திக்கும் ஒவ்வொருவரும் நமக்கு ஆசிரியர்களே. அல்லனவோ நல்லனவோ கற்பிக்க வல்லவர் என்ற புரிதலுக்கு வந்தோம். அடுத்தபடியாக நம்மைச் சூழ்ந்த அனைவரும் கற்பிக்கும் கல்வி குறித்த விவாதம் நடந்தது. இரண்டு தரப்பு குறித்து அதிகம் கவலை தோய்ந்த கருத்துகள் வெளியாகின. அவை ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்கள்.

இவை ஏன் அவ்வளவு தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன? இந்தக் கேள்விக்கான விடை அனைவரும் அறிந்ததே. மனிதர்களையோ நூல்களையோ நாம் தேடிச் சென்றுதான் கற்க இயலும் என்ற நிலையில், இவை மனிதர்கள் இருக்கும் இடத்திற்கே வந்து கற்பிக்கும் அரிய வாய்ப்பினைப் பெற்றவை. அதுமட்டுமில்லாது இவற்றின் கற்பிக்கும் வல்லமை அளவிடற்கரியது. இந்த ஊடகங்கள் கற்பிக்கும் பாடப்பொருள் குறித்து அலசி ஆராயும் போதுதான் மக்களின் ரசனை குறித்த விவாதம் வந்தது.

சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பு அறிவியல் தொழில்நுட்ப மிதமான வளர்ச்சி பெற்றிருந்த காலத்தில் தொலைக்காட்சி என்பது மிகவும் அரிதானதாகவே இருந்தது. அதிலும் குறிப்பாக, வாரமொருமுறை திரைப்படம், திரையிசைப் பாடல்கள் மட்டுமே அதிகம் வரவேற்பு பெற்றிருந்த நிலையில் மக்கள் பலரும் வாசிப்பு போன்ற பொழுதுபோக்குகளில் ஈடுபட அனைவராலும் இயன்றது.

ஆனால் இன்றைய நிலையில், அறைக்கொரு தொலைக்காட்சி, ஆளாளுக்கொரு அலைவரிசை என கற்றல் கற்பித்தல் மிதமிஞ்சுகிறது. இப்படியான வாய்ப்புகளின் மூலம் சமூகத்தில் எங்கோ நடைபெறும் ஒரு செயலானது, எல்லா இடங்களிலுமே ஊர்களிலுமே நடைபெறுவது போன்ற பிம்பங்களை ஏற்படுத்திவிடுகின்றன.

தொலைக்காட்சித் தொடர்களின் மாமியார், மாமனார், நாத்தனார் போலத்தான் எல்லா குடும்பங்களிலும் வாய்க்கிறார்கள் என்றால் குடும்ப நீதிமன்றங்களின் பணிப்பளு தாங்குமோ? கதைக்குக் காலில்லை என்று நல்லவர்களுக்கும் ஒவ்வாத திசையையல்லவா இவை காட்டிக் கொண்டிருக்கின்றன.

அடுத்ததாக சமூக ஊடகங்களின் தாக்கத்தினைச் சொல்லி மாளாது... கைபேசி உள்ளோரெல்லாம் அலைவரிசைகளை ஆரம்பித்து அவரவர்களின் தத்துவ விசாரங்களைப் பகிர்ந்து கொள்கின்றனர். இங்கே தத்துவ விசாரம் என்பது, ஒரு நாகரிகம் கருதிப் பகிர்ந்தாலும், அதில் நடைபெறும் கூத்துகள் அனைவரும் அறிந்ததே. விதிவிலக்காக சில நல்ல விஷயங்கள் பகிரப்படலாம். இந்தக் குழுக்களில் விரும்பி நண்பர்களாகி விருப்பக்குறியிடாததால் பகைவர்களாவோரும் உண்டு.

இப்படியான பகிர்தலுக்குப் பிறகு மீண்டும் தவறான கற்றலை மறத்தல் தொடர்பான விவாதங்களும் எழுந்தன. இப்படியாக, 24 மணி நேரம்-வாரம் முழுவதும் என சமூகம் தவறானவைகளையும் சேர்த்துக் கற்பிக்கும்போது அவர்கள் பள்ளியிலுள்ள சுமார் 6 மணி நேரத்தில் அவர்கள் தவறானவற்றின் தாக்கத்திலிருந்து விடுபட வைத்து சரியானவற்றை ஆசிரியர்கள் சொல்லித் தர வேண்டியுள்ளது. இதனால் ஆசிரியர்களின் பணிப்பளு கூடுகிறது. கட்டற்ற சமூகம் ஆசிரியர்களின் பணிச்சுமையினைக் கூட்டுகிறது.

இன்றைய சூழலில் மேலே சொன்ன எதிர்மறை தாக்கங்கள் தவிர்க்க இயலாதாகிவிட்டது. ஆனால் அதே நேரம் தாக்கங்களைக் குறைக்கும் வல்லமையுள்ளவர்களாக மனிதர்கள் செயல்பட இயலும்.

## இந்தவார ராசிபலன் 22.09.2024 - 28.09.2024

ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம் - ஆடி 19
நல்ல நேரம்: 7.31 - 09.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : பஞ்சமி



**மேஷம்** [ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் எதிர்பாராத தனவரவு வர ஏற்றம் காண்பீர்கள். அரசு வகையில் எதிர்பார்த்த ஆதாயம் மற்றும் உதவிகளால் தொழிலில் முன்னேற்றம் ஏற்படலாம். உங்கள் திறமை மிக்க செயல்களால் வெற்றிகளும், பாராட்டுதல்களும் குவியும். வெளியூர்ப் பயணங்கள், வெற்றிகரமாகவும், இலாபகரமாகவும் அமையும். அரசு பணி புரிபவர்களுக்கு உயர் அதிகாரிகளின் ஆதரவு இருப்பதால், எதிரிகளின் கொட்டம் அடங்கும். இடமாற்றம் பெற முயற்சிப்பர்.



**ரிஷபம்** [ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் எதிர்பார்த்த இனங்களில் இருந்து தன வருமானம் தாராளமாக இருக்கும். குடும்ப உறவுகளின் ஒத்துழைப்பால் வீட்டில் அமைதி நிலவும். பெற்றோரின் உடல் நிலையில் அக்கறை எடுத்தல் அவசியம். பிறமொழி பேசும் பெண்களின் நட்பினால் வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படும். கணவன், மனைவி இடையே அன்பும் பாசமும் பெருகும். அரசுப் பணியாளர்களுக்கு அவர்கள் எதிர்பார்த்த பதவி உயர்வுகள் தாமதப்படலாம். புத்தி சாதுர்யத்தால் வாழ்க்கையில் பொருளாதார நிலை சீராகும். முன்னேற்றம் தரும்.



**மிதுனம்** [ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் உங்கள் செயல்திறன் கூடும். பலவழிகளிலும் வெற்றி மேல் வெற்றி வரும். செல்வ நிலையும் உயரும். பணிபுரியும் பெண்களுக்குத் திருமண காலம் கூடிவரும். அனைத்து வசதிகளுடன் கூடிய அழகிய தனி வீடு அமையும். வெளிநாடு செல்லும் வாய்ப்புகள் வரும். பிற்கால நலன்கருதி சேமிப்புக்கள். பங்குச் சந்தை ஆகியவற்றில் முதலீடு செய்வது நல்லது. பணிபுரியும் பெண்களுக்கு உயர் அதிகாரிகள் ஆதரவால் பணியில் முன்னேற்றங்கள் ஏற்படும். சிலருக்குப் புதிய வாகன யோகம் ஏற்படும்.




**கடகம்** [ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் காரியங்கள் அனைத்தும் சிறப்புற, வெற்றிகரமாக நடக்கும். புதிய நண்பர்கள் சேர்க்கை, தொழில் இலாபம் ஆகியவை ஏற்படும். கற்பனை வளம் பெருகும். தாய் மூலம் நன்மைகள் ஏற்படும். நீங்கள் எப்போதும் பணம் விஷயமான சிந்தனையுடன் இருப்பார்கள். சினத்தை குறைத்து உடன் பிறப்புகளுடன் ஒத்துச் செல்வது நல்லது. இடைவிடாத வேலை காரணமாக நேரத்துக்கு உணவருந்த முடியாத நிலை ஏற்படும். மகிழ்ச்சி பொங்கும்.



**சிம்மம்** [ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் பதவி உயர்வுகள் தேடி வரும். குடும்பத்தில் உள்ளவர்களின் அனுசரணையால், குழப்பங்கள் நீங்கி குதூகலம் உருவாகும். குழந்தைகளின் ஆரோக்கியத்தில் மிகுந்த கவனம் தேவை. பெண்களின் அறிவுத்திறன் கூடும். பண விஷயங்களில் மிகவும் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. நல்லவர்களுடன் ஏற்படும் பழக்கத்தால் நல்ல முன்னேற்றம் ஏற்படும். நிலைகள் உயர்ந்து வலுப்பெறும். உதவிகள் கிடைக்கும்.



**கன்னி** [ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் நல்ல பல கருத்துக்களை கேட்பதின் மூலம் உங்களுக்கு ஞான தன்மை அதிகரிக்கும். பக்தி மார்க்கத்தில் செல்ல மனைவியின் பூரண ஒத்துழைப்பு கிடைக்கும். புதிய கொள்முதல் மூலம் தொழிலில் அதிகமாக வருவாய் பெருக்கம் ஏற்படும். தூர தேசங்களில் இருந்து எதிர்பார்த்த நல்ல செய்திகள் வரும். சுபகாரியச் செலவுகள் ஏற்படும். புதிய முயற்சிகள் பண வருமானம் அதிகரிக்கும். வாடிக்கையாளரிடம் நட்புப் பாரா[illegible] அதிக இலாபம் கிடைக்கும். அழகிய ஆடை ஆபரணங்கள் வாங்குவீர்கள்.



**துலாம்** [ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் நடக்கும். உயர்ரக வாகனங்கள் வாங்கும் யோகம் அமையும். பணம் சம்பாதிப்பதில் ஆக்கமும், ஊக்கமும் ஏற்படும். பல புண்ணியத் தலங்களுக்கு பயணம் செய்யும் வாய்ப்பு கிட்டும். சிலர் பிறரால் குற்றம் சாற்றப்பட்டு அவதிப்பட நேரலாம். பணிபுரியும் பெண்கள் பதவி உயர்வுகளை எதிர்பார்க்கலாம். சிலருக்கு ஓரளவு பணவரவு இருக்கும். தெய்வ சிந்தனை மற்றும் தர்ம சிந்தனையும் ஏற்படும்.



**விருச்சிகம்** [ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் சுபச் செய்திகள் எதிர்பார்க்கலாம். உங்களுக்கு மிக்க அனுகூலமான வாரம். பல வழிகளிலும் தனவரவு ஏற்படும். எந்தக் காரியத்தையும் திறம்படச் செய்யும் உங்கள் செயல்திறன் கூடும். அதன் காரணமாக உங்கள் பணி இலக்கை அடைவீர்கள். சிலருக்கு மற்றவர்களுக்கு ஆணையிடும் உயர் பதவி கிடைக்கும். புதிதாக வேலை தேடுபவர்களுக்கு நல்ல காலம் பிறக்கும். உங்கள் கல்வியின் தரத்தை உயர்த்திக் கொள்வர்.



**தனுசு** [ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் தனவரவு அதிகரிப்பால் குடும்பத்தில் மகிழ்ச்சியும் அதிகரிக்கும். நவநாகரீக ஆடைகள் வாங்கி உடுத்தி மகிழ்வதோடு. உறவுகள் வருகையால் உள்ளம் மகிழும். உறவுகளுடன் உயர்தர உணவகங்களில் உணவருந்தி மகிழ்வீர்கள். சிலருக்கு வீண் பேச்சு, வீண் அலைச்சல் மற்றும் வீண் செலவுகள் ஏற்படும். மிகப் பெரிய சாகசங்களைப் புரிவீர்கள். வீண் சச்சரவுகளை விலக்கினால் பணியில் எதிர்பார்த்த உயர்வுகள் இருக்கும்.



**மகரம்** [ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் உறவுகளை அனுசரித்து சென்றால் அவர்களின் உதவிகள் கேட்காமலே கிடைக்கும். ஆடம்பரச் செலவுகளை குறைத்தால் பொருளாதாரச் சிக்கல்களில் இருந்து மீளலாம். மாணவர்கள் தங்கள் கல்வியில் முழு கவனம் செலுத்தினால் மட்டுமே அதிக மதிப்பெண்கள் பெற இயலும். வேலையில் சிரத்தையும், கடின உழைப்பு தொழிலில் நல்ல முன்னேற்றங்களைத் தரும். அப்போதுதான் உங்கள் கஜானாவும் பணத்தால் நிரம்பும்.



**கும்பம்** [ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் பல வழிகளிலும் இருந்தும் பணம் கூடுதலாக வரும். மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்படாது இருக்க அனுசரித்துச் செல்வது நல்லது. எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு தொழிலில் புதிய திட்டங்களைத் தீட்டி முன்னேற முயல்வீர்கள். உறவுகள் வருகையால் சந்தோஷம் பெருகுவது போல், செலவுகளும் அதிகரிக்கும். சிறப்பான பொதுசனத் தொடர்பு காரணமாக உபரி வருமானம் கிடைக்கும். நண்பர்கள் மற்றும் உறவினர்களுடன் வீண் வாக்குவாதம் செய்யாதிருப்பது நல்லது.



**மீனம்** [ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் மிகுந்த உற்சாகத்துடன் பக்தி மார்க்கத்தில் ஈடுபடுவீர்கள். கடின உழைப்பால் நீங்கள் பெறும் வெற்றிகளால் அனைவரின் பாராட்டையும் பெறுவீர்கள். மங்கையரால் மன மகிழ்ச்சியும், அரசாங்கத்தால் இலாபமும் ஏற்படும். சம்பாதித்த பணத்தை புதிய முதலீட்டுத் திட்டங்கள் மூலம் சேமிக்க முற்படுவீர்கள். நீண்ட நாட்களுக்குப் பின்னர் வந்த பழைய உறவுகளின் வரவு மகிழ்வைத் தரும். பணிபுரியும் பெண்களுக்கு தற்போது இருக்கும் வேலையை காட்டிலும் நல்ல வேலைக்குப் போகும் வாய்ப்புகள் அமையும். பல வகையான உயர்ந்த வாகன வசதி அமையும். மனைவி மூலம் பூரண சுகம் கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் எதிர்பார்ப்புகளும் புதிய ஜனாதிபதியும்!



♦ வீரகத்தி தனபாலசிங்கம்

இலங்கை வரலாறு முன்னொரு போதும் கண்டிராத பொருளாதார நெருக்கடிக்கும் மக்கள் கிளர்ச்சிக்கும் பிறகு தங்கள் வாக்குரிமையை பயன்படுத்துவதற்கு கிடைத்த முதல் வாய்ப்பான ஜனாதிபதி தேர்தலில் வாக்களித்த நாட்டு மக்களுக்கு அடுத்த ஐந்து வருடங்களுக்கு நாட்டை வழிநடத்துவதற்கு ஒரு ஜனாதிபதி இன்று கிடைக்கவிருக்கிறார்.

தங்களது பொருளாதார, சமூக மற்றும் அரசியல் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் தொடர்பில் மக்கள் முன்னென்றும் இல்லாத வகையில் பெரும் எதிர்பார்ப்புக்களைக் கொண்டிருப்பதால் புதிய ஜனாதிபதிக்கு இருக்கும் பொறுப்பு பெருஞ்சவால்கள் நிறைந்தது.


இந்த ஜனாதிபதி எவ்வளவு வாக்குகளைப் பெற்று தெரிவாகினாலும் கூட அவர் அரசியல் ரீதியில் கடுமையாகப் பிளவுபட்ட ஒரு தேசத்துக்கே தலைமை தாங்கப் போகிறார். ஜனாதிபதி தேர்தலை தொடர்ந்து பாராளுமன்ற தேர்தலும் விரைவாக நடைபெறும் என்பதால் அந்த அரசியல் பிளவுகள் மேலும் ஆழமாவதற்கான ஆபத்து இருக்கிறது.

இந்த தடவை ஜனாதிபதி தேர்தலில் பொருளாதார நெருக்கடியே ஆதிக்கம் செலுத்தியது. அந்த நெருக்கடியில் இருந்து நாட்டை விடுவிப்பதற்கு பிரதான வேட்பாளர்களினால் அவர்களது விஞ்ஞாபனங்களில் முன்வைக்கப்பட்ட திட்டங்களில் பெரிய வேறுபாட்டை அடையாளம் கண்டு மக்கள் புதிய ஜனாதிபதியாக ஒருவரை தெரிவு செய்திருக்கிறார்கள் என்று கூறமுடியாது. ஏனென்றால் கடந்த இரு வருடங்களுக்கும் மேலாக முன்னெடுக்கப்பட்டு வரும் சர்வதேச நாணய நிதியத்தின் வழிகாட்டலின் கீழான பொருளாதார மறுசீரமைப்பு செயற்திட்டமே தொடர விருக்கிறது.

அதனால் சர்வதேச நாணய நிதியத்தின் ஆலோசனையின் பேரில் அரசாங்கம் முன்னெடுத்துவந்த சிக்கன நடவடிக்கைகள் மற்றும் கடுமையான வரி அறவீடுகள் காரணமாக தங்களால் சமாளிக்க முடியாமல் இருக்கும் வாழ்க்கைச் செலவை குறைப்பதற்கு புதிய ஜனாதிபதியிடமிருந்து உடனடியாக நடவடிக்கைகளை மக்கள் எதிர்பார்க்கிறார்கள். அதை எந்தளவு விரைவாக அவரால் செய்யக்கூடியதாக இருக்கும் என்பது முக்கியமான கேள்வி.

எது எவ்வாறிருந்தாலும், பொருளாதார மறுசீரமைப்பின் திசையை மறுபரிசீலனை செய்வதுடன் அதன் பாதகமான விளைவுகளையும் சீர்செய்யவேண்டிய அவசியம் புதிய ஜனாதிபதிக்கு இருக்கிறது.

சர்வதேச நாணய நிதியத்தின் செயற்திட்டத்தை தொடர்ந்து முன்னெடுக்கப் போவதாக பிரதான வேட்பாளர்கள் சகலரும் அறிவித்த காரணத்தால் புதிய ஜனாதிபதிக்கு மக்கள் அளித்த ஆதரவை அந்த செயற்திட்டத்துக்கு வழங்கிய ஆதரவாக எந்த விதத்திலும் கருதவும் முடியாது. நாட்டின் பொருளாதார நிலைவரத்தை கருத்தில் எடுக்காமல் தேர்தலில் வெற்றிபெற வேண்டும் என்ற ஒரே நோக்கத்துக்காக மாத்திரம் ஏட்டிக்கு போட்டியாக வழங்கிய வாக்குறுதிகள் புதியவருக்கு பெரிய நெருக்குதலைக் கொடுக்கும் என்பதில் சந்தேகமில்லை. அடுத்து வரவிருக்கும் பாராளுமன்ற தேர்தலையும் அவர் மனதிற்கொண்டே செயற்பட வேண்டியிருக்கும்.



இது இவ்வாறிருக்க, இந்த தடவை ஜனாதிபதி தேர்தலில் தென்னிலங்கையில் இனவாதப்பிரசாரங்கள் இல்லாமல் இருந்தது முக்கியமாக கவனிக்கக்கூடியதாக இருந்த ஒரு ஆரோக்கியமான அம்சமாகும். பிரதான வேட்பாளர்கள் சிறுபான்மை சமூகங்களின் ஆதரவை நாடி அவர்களுக்கு நேசக்கரம் நீட்டியதே அதற்கு காரணம்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் அவர்கள் தங்களது தேர்தல் விஞ்ஞாபனங்களில் குறிப்பிட்ட சில வாக்குறுதிகளை வழங்கியிருந்தார்கள். இனப்பிரச்னைக்கு தீர்வைக் காண்பதற்கு வரும் நாட்களில் முன்னெடுக்கப்படக்கூடிய முயற்சிகளுக்கு பெரும்பானமை சமூகத்தவர்களின் ஆதரவைப் பெறுவதற்கு வசதியாக இனவாதப் பிரசாரங்கள் இல்லாத இந்த சமுகமான சூழ்நிலை தொடருவதை புதிய ஜனாதிபதி உறுதி செய்ய வேண்டியது அவசியமாகும்.

தேர்தல் வாக்குறுதிகளை காற்றில் வீசிவிட்டு இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகளை பின்னரங்கத்துக்கு தள்ளிவிடும் வழமையான நடைமுறையை கைவிட்டு காலந்தாழ்த்தாமல் தீர்வைக் காண்பதற்கு புதிய ஜனாதிபதி தன்னை அர்ப்பணிப்பதன் மூலம் மீண்டும் பெரும்பான்மையினவாத அணிதிரட்டலுக்கான வாய்ப்புக்களை கணிசமானளவுக்கு தடுக்கமுடியும்.

நாடு எதிர்நோக்கும் சவால்களுக்கான தீர்வு பொருளாதார மறுசீரமைப்பில் மாத்திரமல்ல, சகல சமூகங்களினதும் உரிமைகளுக்கும் நியாயபூர்வமான அபிலாசைகளுக்கும் மதிப்பளிக்கும் அரசியல் முறைமையை கட்டியெழுப்புவதிலும் தங்கியிருக்கிறது. அதிகாரப் பரவலாக்கலின் மூலமாக இனப்பிரச்சினைக்கு தீர்வைக்காண்பதற்கான முயற்சிகளை பொருளாதார மீட்சியின் ஒரு இன்றியமையாத அங்கமாக்கக்கூடிய அணுகுமுறையை புதிய ஜனாதிபதி கடைப்பிடிக்க முன்வந்தால் இலங்கையின் சகல சமூகங்களினதும் சர்வதேச சமூகத்தினதும் முழுமையான ஆதரவைப் பெறக்கூடியதாக இருக்கும்.

புதிய ஜனாதிபதி இனநெருக்கடிக்கு தீர்வைக் காண்பதற்கு முயற்சியை முன்னெடுக்கும் பட்சத்தில் அவரை எதிர்த்துப் போட்டியிட்ட பிரதான வேட்பாளர்கள் எதிர்காலத்தில் அதை எதிர்க்காமல் இருப்பதற்கான உத்தரவாதத்தை அவர்களிடம் இருந்து பெறுவதற்கு தமிழ் அரசியல் கட்சிகள் பேச்சுவாரத்தைகளை முன்கூட்டியே நடத்தியிருக்கவேண்டும்.

ஆனால், வெறுமனே கடந்த கால நினைவுகளுடன் தமிழ் மக்களைக் கட்டிப்போடும் உணர்ச்சிவசமான சுலோகங்களுக்கு கொடுக்கின்ற முக்கியத்துவத்தை நிலைவரத்துக்கு ஏற்றமுறையில் மூலோபாயமான அணுகுமுறைகளுக்கு கொடுக்காமல் இருக்கும் தமிழ் தேசியவாத அரசியல் கலாசாரம் ஒரு பெரிய சாபக்கேடு.

புதிய அரசியலமைப்பை கொண்டு வருவதாக வாக்குறுதி அளிப்பது முக்கியமான பிரச்சினைகளுக்கு தீர்வுகளைக் காண்பதை காலந்தாழ்த்துவதற்கான ஒரு மூலோபாயமாகவே அரசியல் கட்சிகள் அண்மைய தசாப்தங்களாக கடைப்பிடித்து வந்திருக்கின்றன. அதனால் இந்த தடவையும் அந்த வாக்குறுதியை நம்பி எவருக்காவது மக்கள் வாக்களித்திருப்பார்கள் என்று நம்பினால் அது தவறாகும்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதற்கு அந்த பதவியில் அமரும் எந்த அரசியல்வாதியும் ஒருபோதும் விரும்பமாட்டார்கள் என்ற அனுபவரீதியான உண்மையை மறுதலித்துக் காட்டுவதற்கு எம்மத்தியில் அரசியல் மேதைகள் இல்லை.

அரசியல் வர்க்கம் மீதான மக்களின் நம்பிக்கை அருகிப்போனதற்கு அதுவே அடிப்படைக் காரணம். புதிய ஜனாதிபதியிடம் இது விடயத்தில் எந்த நம்பிக்கையில் வேறுபட்ட அணுகுமுறையை எதிர்பார்க்கலாம்? ●

# இந்த முறைத் தேர்தலில் எத்தனை வி. பொன்னம்பலங்கள்?

மரியாம்பிள்ளை வரதராஜன்

ஈழத்தமிழ் மக்கள் அரசியலில் முதலாவது பொது மக்கள் வாக்கெடுப்பு 1975 ஆம் ஆண்டு இடம்பெற்றது.

1975 காங்கேசன்துறை இடைத் தேர்தலை தமிழர் இறைமைக்கான ஆணையாகவே அன்று கருதப்பட்டது.

தமிழ்மக்கள் ஒற்றையாட்சி அரசியல் அமைப்பை ஏற்கவில்லை என்று மக்களின் ஆணையை வழங்கிக் காட்டும் வகையில் தந்தை செல்வா தமது பதவியை இராஜினாமா செய்தார்.

1972 முதலாம் குடியரசு ஒற்றையாட்சி அரசியல மைப்பினை தமிழ் மக்கள் எதிர்க்கிறார்கள் பூர்வீகம் வாய்ந்த தமிழ் மக்களின் இறைமைக்கு மதிப்பளிக்கப் படவில்லை என்றே - தந்தை செல்வநாயகம் தமது எம்.பிப் பதவியை இராஜினாமாச் செய்தார்.

ஆனால், அதற்கான இடைத்தேர்தல் நடத்துவதை சிறீமாவோ அரசு இழுத்தடித்து பின்னர் எப்படியோ 1975 இல், அதனை நடத்தியது.

ஒரு "பை எலக்சனுக்காக" இலங்கை அரசியல் வரலாற்றில் இலங்கை அரசு தனது அரசாங்க செல்வாக்குகள் பலங்கள், வளங்கள் எல்லாவற்றையும் பயன்படுத்தி கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கிய பிரமுகரான வி. பொன் னம்பலத்தை. செல்வாவுக்கு எதிராக நிறுத்தியது.

இலங்கை அரசாங்கத்தின் அமைச்சர்கள் பிரதானிகள் எல்லோரும் வந்து பிரசாரம் செய்தனர். தமிழரசுக் கட்சியின் கூட்டங்களுக்கு குடாநாட்டின் பல இடங்களிலிருந்தும் மக்கள் போய்ப் பங்குபற்றினர்.

கிழக்கிலிருந்தும் இராசதுரை, மசூர் மௌலானா உள்பட பல பேச்சாளர்கள் கலந்து கொண்டனர். அது தமிழ் மக்களின் எழுச்சி மிக்க தேர்தலாக அமைந்தது.

அதில், செல்வநாயகம் பெற்ற வாக்குகள்: 25 927. (72.55 வீதம்)

வீ. பொன்னம்பலம்: 9457 (26.46 வீதம்)

வேறு யாருமே போட்டியிடவில்லை.

1977 இல் தமிழர் விடுதலைக் கூட்டணியை எதிர்த்துப் போட்டியிட்ட சுயாட்சிக் கழகம் கூட தமிழரசுக்கு எதிராக இதில் போட்டியிடவில்லை. தமிழ்க் காங்கிரஸ் கட்சியும் இதில் தமிழரசுக்கு ஆதரவு வழங்கியிருந்தது. (குமார் பொன்னம்பலம் அப்போது "ஜூனியர் பொன்னம்பலம்" என்ற பெயரில் சட்டவாளராகக் கொழும்பில் பணியாற்றிக் கொண்டிருந்தார் அரசியலுக்குள் நுழையாத காலம்).

1972 இடைத்தேர்தலுக்குப் பின்னர் தமிழ் மக்கள் மத்தியில் எழுச்சி மிக்க தேர்தலாக அமைந்தது 1977 பொதுத்தேர்தல் ஆகும். 1977 பொதுத் தேர்தலில் 1972 அரசியலமைப்பை எதிர்த்து. அதைத் தொடர்ந்த பரிமாணமாகத் தோற்றம் பெற்ற வட்டுக் கோட்டை தீர்மானத்துக்கு ஆதரவாக, அதாவது தமிழ் ஈழ ஆணைக்கு இதே காங்கேசன்துறைத் தொகுதியில் மட்டும் அளிக்கப்பட்ட வாக்குகள்:-

அ. அமிர்தலிங்கம் - 31,155 (85.41 வீதம்)

சி.சிறீதரன் - 5,322. (14.59 வீதம்)

1975 காங்கேசன்துறை இடைத்தேர்தல் பற்றிய சுவையான கதை ஒன்று உண்டு.

தேர்தல் முடிந்து சில நாள்களின் பின் ஒரு மரணச் சடங்கில் கலந்துகொள்ள தலைவர் செல்வநாயகம் வந்தபோது அங்கு வி. பொன்னம்பலமும் வந்திருந்தாராம். இருவரும் நேருக்கு நேர் சந்திக்கும் நிலை. அப்போது தந்தை செல்வாவை வி.பி குசலம் விசாரித்ததுடன் அவரிடம் எனது வாக்கை நான் உங்களுக்குத்தான் வழங்கினேன் என்று சொன்னது- கசிந்து பரவிவிட்டதாம். பின்னர் வி.பி. கொம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து பிரிந்து செந்தமிழர் இயக்கத்தை ஆரம்பித்து தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் இணைந்து செயற்பட்டது வேறு கதை. அப்போதும் அவர் தமது வாக்கைத் தாம் செல்வாவுக்கே வழங்கியதாகக் குறிப்பிட்டார்.

அவர் சொன்னதற்குப் பின்னர் அவரது வீட்டோடு அண்டிய மதிலில் யாரோ இனந்தெரியாதவர்கள் "9457 முட்டாள்கள்" (அவருக்கு வாக்களித்தவர்கள்) என்று மட்டும் எழுதிவிட்டார்களாம். இங்கு குறிப்பிட வந்தது முட்டாள்கள் பற்றியல்ல!

முட்டாள்கள் என்றைக்கும் வாக்காளர்களாக இருக்கும் வரை அரசியல்வாதிகளுக்குக் கொண்டாட்டம் தான் என்று பிரபல அரசியல் விமர்சகர் சோ சொன்னது எமக்கும், எக்காலத்திற்கும் பொருந்தும்.


அவர்களை விடுவோம்.

அன்று வி.பொன்னம்பலத்தைப் பகிடிபண்ணினார்கள். அவராவது அன்றைய காலசூழ்நிலையில் தமது மனச்சாட்சிக்கு மதிப்பளித்து தமிழ்த் தேசியத்தையே ஆதரித்தார். ஆனால் இன்று?


"..சேர் எனது அரசியலுக்காகவே இப்படி எல்லாம் செய்கிறேன் தமிழ்த்தேசியம் பேசுறேன். ஆனால் எனது "சப்போட்"என்றைக்கும் உங்களுக்கு!" என்று சொல்லும் "வி. பொன்னம்பலம்"- கள் இன்னும் இருக்கிறார்களே பாருங்கள். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பதி லட்டில் விலங்குக் கொழுப்பு:



# குற்றச்சாட்டின் முழு பின்னணி என்ன?



இந்தியாவின் ஆந்திர மாநிலத்தில் உள்ள திருப்பதி கோவிலில் பிரசாதமாக வழங்கப்படும் லட்டு தற்போது சர்ச்சையாகியுள்ளது. முதல்வர் சந்திரபாபு நாயுடு, ஒய்.எஸ்.ஆர்.காங்கிரஸ் ஆட்சியின்போது வழங்கப்பட்ட திருப்பதி லட்டுவில், நெய்க்கு பதிலாக விலங்குகளின் கொழுப்பு கலந்து கொடுக்கப்பட்டதாக குற்றச்சாட்டை வைத்துள்ளார்.

அமராவதியில் தேசிய ஜனநாயகக் கூட்டணி எம்.எல்.ஏக்களுடன் நடைபெற்ற கூட்டத்தில் இந்தத் தகவலை வெளியிட்டார் சந்திரபாபு. ஒய்.எஸ். ஆர். காங்கிரஸ் கட்சியினர் இந்தக் கருத்துக்கு கடுமையான எதிர்ப்புகளைப் பதிவு செய்து வருகின்றனர். ஆந்திராவில் உள்ள அரசியல் கட்சித் தலைவர்கள் மற்றும் வணிகர் சங்கத் தலைவர்கள் தங்களின் கருத்துகளைப் பதிவு செய்துள்ளனர்.

தேசிய ஜனநாயகக் கூட்டணியின் சட்டமன்ற உறுப்பினர்களைச் சந்தித்துப் பேசிய சந்திரபாபு, முந்தைய ஆந்திர அரசை விமர்சனம் செய்தார்.

திருப்பதி கோவிலில் வரும் பக்தர்களுக்கு வழங்கும் லட்டுவை தயாரிக்கும் போது முறையான தர நிலைகளை முந்தைய அரசு பின்பற்றவில்லை என்றும் குற்றம் சுமத்தினார்.


'தரக் குறைவான பொருட்களைக் கொண்டு லட்டுகள் உருவாக்கப்பட்டது. இதை நாங்கள் பலமுறை கூறியுள்ளோம். அன்னதானத்திற்குப் பயன்படுத்தப்படும் பொருட்களும்கூட தரமற்றதாக இருந்தது.

கடவுளுக்கு வாங்கும் பிரசாதத்தில் இத்தகைய குளறுபடிகள் நடைபெற்றுள்ளன. சில நேரங்களில் இது மிகவும் வருத்தமளிக்கிறது. சுத்தமான நெய்க்குப் பதிலாக விலங்குகளின் கொழுப்பு இதில் பயன்படுத்தப்பட்டுள்ளது. நாங்கள் லட்டுவின் தரத்தை உயர்த்துவோம். வெங்கடேஷ்வரரின் புனிதத்தைக் காக்கும் பொறுப்பு நம் அனைவருக்கும் உள்ளது," என்று கூறினார் சந்திரபாபு.

**ஒய்.எஸ்.ஆர் காங்கிரஸ் கூறுவது என்ன?**

ஒய்.எஸ்.ஆர் காங்கிரஸ் ஆட்சியின் போது திருமலா திருப்பதி தேவஸ்தானத்தின் தலைவராகப் பணியாற்றிய ஒய்.வி.சுப்பாரெட்டி, சந்திரபாபுவின் இந்தக் கருத்துகளுக்கு கடுமையான கண்டனங்களைப் பதிவு செய்தார்.

கோடிக்கணக்கான பக்தர்களின் நம்பிக்கையையும், திருமலாவின் புனிதத்தையும் சேதப்படுத்தும் வகையில் பேசி சந்திரபாபு மிகப்பெரிய பாவத்தைச் செய்து விட்டார் என்று சுப்பாரெட்டி கூறியுள்ளார். சந்திரபாபுவின் கருத்து மிகவும் மோசமானது என்று தனது எக்ஸ் பக்கத்தில் அவர் பதிவிட்டுள்ளார்.




தெலுங்கு [illegible] ஆட்சி அமைந்த பிறகு [illegible] தேதி அன்று, திருமலா திருப்பதி தேவஸ்தானத்தின் செயல் அலுவலர் நெய்யில் கலப்படம் செய்வது குறித்து தன்னுடைய கருத்தைத் தெரிவித்தார்.

தாவர எண்ணெய்யை நெய்யோடு கலக்கிறது திருமலா திருப்பதி தேவஸ்தானம் என்று அவர் குற்றம் சாட்டினார். நெய்யை வழங்கும் ஐந்து நிறுவனங்களில் ஒன்றுதான் இத்தகைய கலப்படமான நெய்யை வழங்குகிறது என்றும் அவர் கூறினார்.

திருப்பதி தேவஸ்தானத்தின் முன்னாள் உறுப்பினர் ரமணா சந்திரபாபு நாயுடு கூறுவது உண்மைதான் என்று குறிப்பிட்டார்.

'ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் கட்சியின் ஆட்சியின்போது லட்டுவில் விலங்குகளின் கொழுப்பு கலக்கப்பட்டது உண்மைதான்," என்றும் அவர் தெரிவித்தார்.

ஆந்திர பிரதேசம் காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் ஒய்.எஸ்.ஷர்மிளா, 'தெலுங்கு தேசம் கட்சியும், ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் கட்சியும் இந்து மக்களின் நம்பிக்கையைக் காயப்படுத்தி அரசியல் செய்து வருகின்றனர்' என்று குற்றம் சாட்டினார்.

அரசாங்கம் உடனடியாக உயர்மட்டக் குழு ஒன்றை அமைத்து இதை விசாரிக்க வேண்டும். இல்லையென்றால் சி.பி.ஐ. விசாரிக்க வேண்டும் என்று கூறினார். முதல்வராக இருக்கும் சந்திரபாபு, லட்டு பிரசாதத்தில் நெய்க்குப் பதிலாக விலங்குகளின் கொழுப்பு பயன்படுத்தப்பட்டது எனக் கூறியிருப்பது வருத்தமடைய வைக்கிறது, மேலும் திருப்பதியின் மாண்பு மற்றும் புனிதத்திற்கு கலங்கம் விளைவிப்பதாக அமைந்துள்ளது என்றும் கூறியுள்ளார்.

**தேவஸ்தான சங்கத் தலைவர்கள் கூறுவது என்ன?**

திருமலா திருப்பதி தேவஸ்தான ஊழியர்கள் சங்கத்தின் கௌரவ தலைவர் கந்தரபு முரளி, முதல்வரின் கருத்தை விமர்சனம் செய்தார்.

லட்டுவில் விலங்கு கொழுப்பு பயன்படுத்தப்பட்டதாகக் கூறுவது திருமலை தேவஸ்தான ஊழியர்களை அவமதிக்கும் செயல் என்று கூறினார்.

தேவஸ்தானத்தில் இருக்கும் ஆய்வகத்தில் அனைத்து விதமான உணவுப் பொருட்களும் முறையாக சோதிக்கப்பட்டே எந்தவிதமான பிரசாதமும் தயாரிக்கப்படுகிறது. பரிசோதனைகள் முடிவுற்ற பிறகே பயன்பாட்டிற்கும் வைக்கப்படுகிறது என்றும் அவர் கூறினார்.

மத்திய அரசின் குழுவால் சோதிக்கப்படும் உணவுப் பொருட்கள் முறையாகப் பரிசோதிக்கப்பட்ட பிறகே பிரசாதத்திற்கு வழங்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

பாஜக நாடாளுமன்ற உறுப்பினரும், அக்கட்சியின் இதர பிற்படுத்தப்பட்டோர் பிரிவுக்கான தலைவருமான லக்ஷ்மணன் லட்டுவில் விலங்கு கொழுப்பு பயன்படுத்தப்பட்டிருப்பது துரதிர்ஷ்டவசமானது என்று கூறினார்.

'மொத்த இந்து சமூகமும் இந்தச் செயலை கண்டிக்கிறது. என்.டி.ஏ கூட்டணியில் ஆட்சி அமைத்திருக்கும் சந்திரபாபு, இந்தச் செயலில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள் மீது சட்டப்பூர்வமாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்," என்று கூறினார்.

ஆய்வக முடிவுகள் கூறுவது என்ன?

தெலுங்கு தேசம் கட்சியின் செய்தித் தொடர்பாளர் அனம் வெங்கட ரமண ரெட்டி, குஜராத்தில் அமைந்திருக்கும் தேசிய பால்வள மேம்பாட்டு வாரியத்திற்கு திருமலா திருப்பதி தேவஸ்தானத்தின் உணவு மாதிரிகளை அனுப்பியதாகத் தெரிவித்தார்.

ஆய்வகத்தில் சோதனைக்கு உட்படுத்தப்பட்ட உணவுகளில் விலங்குகளின் கொழுப்பு கலக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

எஸ் என்ற மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட அளவுக்கு மேல் கொழுப்பு இருந்தால் அது வெளிப்புற கொழுப்பு என்று அறிவிக்கப்படும். எஸ்-இன் மதிப்பானது 95.68 முதல் 104.32-க்குள் இருக்க வேண்டும்.

சோயா, சூரியகாந்தி, ஆலிவ், மீன் எண்ணெய் அல்லது பாமாயில் போன்றவை வெளிப்புற கொழுப்பு என்று கருதப்படுகிறது.

இருப்பினும், இந்த ஆய்வக முடிவு தேசிய பால்வள மேம்பாட்டு வாரியத்தால்தான் வழங்கப்பட்டது என்பதை உறுதி செய்ய இயலவில்லை.

**புனிதமான லட்டுகளை உருவாக்குவோம் - சந்திரபாபு**

செப்டம்பர் 19ஆம் தேதியன்று, இந்த சர்ச்சை குறித்து மீண்டும் பேசிய சந்திரபாபு, திருமலை திருப்பதியில் வழங்கப்படும் லட்டுகள் கோடிக்கணக்கான மக்களால் புனிதமாகக் கருதப்படுகிறது. தற்போது அது கலப்படமாக்கப்பட்டுள்ளது.

அதை அவர்கள் சரி செய்து வருகின்றனர். தரமான மூலப் பொருட்களைப் பயன்படுத்தி தரமான லட்டுகளை வழங்குவார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பின் மீதான விமர்சனங்களைக் கருத்தில் கொள்ளல்!

கந்தையா அருந்தவபாலன்



பல்வேறு கூறுகளாகப் பிரிந்து நிற்கும் ஈழத்தமிழர்களை ஒரு தேசமாக ஒன்றிணைத்து இறைமையுள்ள ஒரு தேசிய இனம் என்ற கூட்டுணர்வை ஏற்படுத்துவதைப் பிரதான நோக்கமாகக் கொண்டு ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளரை முன்னிறுத்துவதை முதன்மைப்படுத்தி உருவாக்கப்பட்ட தமிழ்த்தேசியப் பொதுக்கட்டமைப்பு மிகக் குறுகிய காலத்தில் பல்வேறு தடைகளையும், எதிர்ப்புகளையும், சூழ்ச்சிகளையும் எதிர்கொண்டு கணிசமான முன்னேற்றத்தைப் பதிவு செய்துள்ளதைக் காணமுடிகிறது. யுத்தத்தின் பின்னரான தமிழர் அரசியலில் மிகக் காத்திரமான பங்கை வகித்த தமிழ் மக்கள் பேரவையின் மறைவுக்குப் பின் ஏற்பட்ட வெற்றிடத்தில் விளைந்த கசப்பான அனுபவங்களின் அடிப்படையில் அதுபோன்ற ஒரு அமைப்பின் அவசியம் உணரப்பட்டதன் ஒரு வெளிப்பாடாகவே இக்கட்டமைப்பு உருவாக்கப்பட்டது எனக் கருதமுடியும். ஒருங்கிணைக்கப்பட்ட கணிசமான சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளும் அரசியல் கட்சிகளின் தலைவர்களும் சில சமூகச் செயற்பாட்டாளர்களும் ஒன்றிணைந்து இக்கட்டமைப்பை உருவாக்கி எதிர்பார்க்கப்பட்டதற்கும் மேலாக பொது வேட்பாளர் விடயத்தில் செயற்பட்டுள்ளதைக் காணமுடிகிறது. எனினும் இக்கட்டமைப்புத் தொடர்பாக பல்வேறுதரப்புகளிலிருந்தும் பல விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளதையும் அவதானிக்கலாம். அரசியல் கட்சியல்லாத ஒரு பொது அமைப்பு என்றாலும் அதன் தூர நோக்கு அரசியல் இலக்குகளைக் கொண்டிருப்பதும், அதில் அரசியல் கட்சிகள் பங்காளராக இருப்பதும், முதற்செயற்றிட்டம் ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளரை நிறுத்தி அது சார்பாக தொழிற்படுவதுமாக இருந்த காரணங்களால் அவ்வாறான பல விமர்சனங்கள் எழுவது தவிர்க்க முடியாதாக இருந்தது. தமிழ் மக்களை ஒரு தேசமாக ஒன்றிணைத்து அவர்களின் அபிலாசைகளை வென்றெடுப்பதற்கான செல்நெறியை வகுக்க விரும்பும் இக்கட்டமைப்பு தன்மீதான ஆரோக்கியமான விமர்சனங்களையும் குற்றச்சாட்டுகளையும் கருத்தில் எடுக்கவேண்டியதும் அதனடிப்படையில் தேவைப்படும் திருத்தங்களையும் புத்தாக்கங்களையும் உள்வாங்க வேண்டியதும் அவசியமான ஒன்றாகும்.

முன்வைக்கப்பட்ட எதிர்மறை விமர்சனங்களில் ஒன்று இக்கட்டமைப்பின் திட்டமிடல் பலவீனம் தொடர்பானது. தமிழ் மக்களைத் தேசமாக ஒன்றிணைப்பதற்காக பொதுவேட்பாளரை முன்னிறுத்துவது, அதிகளவான வாக்குகளைக் கிடைக்கச் செயவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பது என்பதற்கப்பால் தேர்தலின் பின் இக்கட்டமைப்பின் செயற்பாடுகள் என்ன என்பதற்கான சரியான நோக்கமும் திட்டமிடலும் இருந்ததற்கான வெளிப்பாடுகள் எதுவும் காணப்படவில்லை. பொதுவேட்பாளர் மூலம் மட்டும் மக்களைத் தேசமாக ஒன்றுபடுத்தும் நோக்கம் முழுமை பெறப்போவதில்லை. அடுத்த கட்டமாக அந்த நோக்கத்தை நிறைவேற்ற எடுக்கப்பட வேண்டிய படிமுறையான வேலைத்திட்டங்கள் எவை? தேசமாக ஒன்றுபடுத்துவதன் மூலம் அடுத்து என்ன செய்வது? அதை என்ன வடிவங்களில் முன்னெடுப்பது? அவற்றை யார் முன்னெடுப்பது? என்பது போன்ற பல்வேறு கேள்விகளுக்கு தெளிவான விடையில்லை என்பது திட்டமிடற் பலவீனமாகுமாகும். குறுகிய காலவரையறை, ஆளணிப் பற்றாக்குறை, ஏனைய வளப் பற்றாக்குறை போன்ற உண்மைக் காரணங்கள் பல இதன்பின்னால் உள்ளன என்பது உண்மை எனினும் இவை பல்வேறு ஐயங்களை மக்களிடத்து ஏற்படுத்தியுள்ளன என்பதும் அதேயளவு உண்மையாகும். ஜனாதிபதித் தேர்தலுடன் இக்கட்டமைப்பு இல்லாமற் போய்விடுமா? இதன்பின்னால் வேறு கரங்கள் உள்ளனவா? இதில் இணைந்துள்ள கட்சிகள் இதனைத் தங்கள் எதிர்காலத் தேர்தலுக்கான களமாகப் பயன்படுத்த விரும்புகின்றனவா? அடுத்து வரக்கூடிய தேர்தல் ஒன்றில் இக்கட்டமைப்பினதும் கட்சிகளதும் நிலைப்பாடு என்னவாக இருக்கப் போகிறது? என்பது போன்ற பல ஐயங்கள் முன்வைக்கப்பட்டுள்ளதைக் காணமுடியும். இக்கேள்விகளுக்கு இக்கட்டமைப்பின் உறுப்பினர்களிடம் தெளிவான பதில் இல்லை. காரணம் இவை தொடர்பான தீர்மானங்களோ திட்டமிடல்களோ சரியாக மேற் கொள்ளப்படவில்லை என்பதுதான். இது ஒன்றும் காலங் கடந்து போகவில்லை. தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளர் எவ்வளவு வாக்குப் பெற்றார் என்பதை விட அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்கான திட்டமிடலும் செயற்பாடுகளுமே முக்கியமானவை. ஏனெனில் இது நீண்டகால செயன்முறை. நீண்டகாலத் திட்டங்கள், குறுங்காலத்திட்டங்கள் அவற்றுக்கான செயற்றிட்டங்கள், வேலைத்திட்டங்கள் தேவையான ஆளணியும் ஏனைய வளங்களும் தொடர்பாக சரியான திட்டமிடல் அவசியமாகும். நேரத்திற்கேற்ற தீர்மானங்களும் செயற்பாடுகளும் எனில் தமிழ்ப் பொதுக் கட்டமைப்பும் பத்தோடு பதினொன்றாவே மாறிவிடும்.

இன்னொரு முக்கியமான குற்றச்சாட்டு இக்கட்டமைப்பின் பிரதான பங்காளிகளான அரசியல் கட்சித் தலைவர்கள் தொடர்பானவை. இவர்கள் செய்யவேண்டியவற்றை செய்யாதிருந்தமையும் செய்யக்கூடாதவற்றை செய்ததுமே மக்கள் மத்தியில் கடும் விமர்சனங்களுக்குள்ளானது. இக்கட்சித்தலைவர்கள் சிலரின் தமிழ்த் தேசியத்துக்கெதிரான கடந்தகாலச் செயற்பாடுகள் காரணமாக இவர்கள் மீதான ஐயமும் வெறுப்பும் கணிசமான மக்களிடத்தில் இன்றும் காணப்படினும் அதனை நிரூபிப்பது போலான சில செயற்பாடுகளை இவர்கள் இக்காலத்திலும் செய்தமை கடும் விமர்சனத்துக்குள்ளானது. ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளர் என்ற எண்ணக்கருவை முன்மொழிந்த ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் அதனை ஒப்பேற்றுவதில் ஒப்பீட்டு ரீதியில் கூடிய பங்களிப்பைச் செய்திருந்தபோதும் கட்சித்தலைவர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களுமான செல்வம் அடைக்கலநாதனும் சித்தார்த்தனும் கட்டாயக் கல்யாணம் செய்த தம்பதிகளைப் போன்றே பொதுவேட்பாளர் தொடர்பில் இறுதிவரை இருந்து வந்தனர். தொடக்கத்திலிருந்தே இவ்விருவரின் கருத்து வெளிப்பாடுகளில் தளம்பலும் முரணும் காணப்பட்டே வந்தன. பொதுவேட்பாளர் தொடர்பாக ஓர் உறுதிநிலையோ அன்றி முழுமூடுபாடோ இவர்களிடம் தென்படவில்லை. இவர்களது கட்சிகளின் கீழ்மட்டத் தலைவர்கள் சிலர் பரப்புரைகளில் பங்கெடுத்துக் கொண்டாலும் பரப்புரைக் கூட்டங்களில் இவர்களைக் காண்பது அரிதாக இருந்தது. மாறாக இக்காலத்தில் ஜனாதிபதி ரணில் தன்னைச் சந்திப்பதற்காக இவர்களுக்கு விடுத்த அழைப்பை உடனடியாக ஏற்பதில்லை எனப் பொதுக்கட்டமைப்பு தீர்மானம் எடுத்திருந்தபோதும் அதனைக் கருத்தில் கொள்ளாது சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், ஜனநாயப் போராளிகள் ரணிலைச் சென்று சந்தித்தமை இவர்கள் மீதான மக்களின் ஐயத்தை மேலும் பலப்படுத்திவிட்டது. ரணில் ஜனாதிபதியாக இருந்தாலும் அவர் வேட்பாளர் என்றரீதியில் தேர்தலில் தமக்கான அரசியல் ஆதரவைக் கோருவதற்காகவே அழைக்கிறார் என்பதைத் தெரிந்து கொண்டும் தரிசனத்துக்காக ஓடோடிச் சென்றமை கண்டனத்துக்குள்ளானது. தாங்களாகவே உருவாக்கிக் கொண்ட கட்டமைப்பின் முடிவுகளை தாங்களாகவே மீறிக்கொண்டமை, அதுவும் கட்டமைப்புத் தொடர்பாகப் பல்வேறு எதிர்மறைக் கருத்துக்கள் நிலவிவந்த தொடக்க காலத்திலேயே இதனை மேற்கொண்டமை பொதுக் கட்டமைப்பு மீதான மக்களின் நம்பிக்கையைச் சிதறடிக்கும் செயலாகவே பார்க்கப்பட்டது.

> தமிழ்ப் பொதுவேட்பாளர் தொடர்பாக மக்கள் மத்தியில் போதிய தெளிவையும் உந்துதலையும் வழங்குவதில் கட்டமைப்பு அதிகளவு வெற்றிபெறவில்லை என்றே கருதப்படுகிறது. உண்மையில் அடிமட்ட மக்கள் மத்தியில் அதனைக் கொண்டு செல்வதற்கான நல்ல வாய்ப்புகள் இருந்தபோதும் அதனைப் பயனுற அது கையாளவில்லை.

இதேவேளை ரெலோ கட்சியின் வன்னிமாவட்ட இன்னொரு நாடாளுமன்ற உறுப்பினரான வினோ நோகராதலிங்கம் தனது கட்சியின் முடிவுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்ததுடன் பொதுவெளியில் தமிழ்ப் பொதுவேட்பாளருக்கு எதிரான பரப்புரைகளைத் தொடர்ந்து செய்து வந்தார். இது தொடர்பாக கண்டனமோ, உரிய நடவடிக்கைகளோ கட்சித்தலைவரிடமிருந்து வரவில்லை. பதிலாக அது வினோவின் தனிப்பட்ட கருத்தென இலகுவாகக் கடந்து சென்றுவிட்டார். இறுதியில் வினோ ரணிலிடம் சரணாகதி அடைந்துவிட்டபோதும் அது தொடர்பாகவும் எந்தக்கருத்தோ கண்டனமோ நடவடிக்கையோ இதுவரை இல்லை. அதேபோல கிழக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினரான கோவிந்தன் கருணாகரம் பொதுக்கட்டமைப்பின் முடிவுக்கு மாறாக விருப்பு வாக்குகள் வழங்குவது தொடர்பாகவும் பிரஸ்தாபித்திருந்தார். இதுபோன்றதொரு கருத்தை கட்டமைப்பிலுள்ள இன்னொரு கட்சித்தலைவரான விக்னேஸ்வரனும் வெளிப்படுத்தியிருந்தார். இதேநேரம் இவர்களில் சிலர் ரணிலிடம் சில சலுகைகளைப் பெற்றுக் கொண்டதான கருத்தும் பரப்பப்பட்டது. பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன் போலவே இது மக்களால் பார்க்கப்பட்டது. இவையெல்லாம் பொதுக்கட்டமைப்பு என்பது கட்டுப்பாடு, தெளிவு, புரிந்துணர்வு எதுவுமற்ற நெல்லிக்காய் மூடையாகும் என்ற தோற்றத்தை மக்கள் மத்தியில் விதைத்து அக்கட்டமைப்பு மீதான நம்பிக்கையைக் குறைக்க ஏதுவாகின.

தமிழ்ப் பொதுவேட்பாளர் தொடர்பாக மக்கள் மத்தியில் போதிய தெளிவையும் உந்துதலையும் வழங்குவதில் கட்டமைப்பு அதிகளவு வெற்றிபெறவில்லை என்றே கருதப்படுகிறது. உண்மையில் அடிமட்ட மக்கள் மத்தியில் அதனைக் கொண்டு செல்வதற்கான நல்ல வாய்ப்புகள் இருந்தபோதும் அதனைப் பயனுற அது கையாளவில்லை. ஒரு புறத்தில் மக்களுடன் பிணைந்துள்ள சிவில் அமைப்புகளும் அதன் தொண்டர்களும். மறுபுறத்தில் கட்சி வலையமைப்பும் அதன் உறுப்பினர்களும். இந்த இரண்டையும் திட்டமிட்டு நெறிப்படுத்தியிருந்தால் இலக்கை நோக்கி இன்னும் கூடுதலாக நகர்ந்திருக்க முடியும். ஒவ்வொரு வீட்டின் கதவைத் திறப்பதற்கு ஜனநாயகத் தமிழ்த் தேசிய முன்னணியின் உள்ளூராட்சி வேட்பாளர்கள் மற்றும் விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் கூட்டணியின் உள்ளூராட்சி வேட்பாளர்களே போதுமானவர்கள். ஆனால் அக்கட்சிகளின் தலைவர்கள் அவர்களை கூட்டாக அழைத்து அவர்களுக்கு விளக்கி வேலைத்திட்டங்கள் எதுவும் வழங்கியதாகத் தெரியவில்லை. அவ்வேட்பாளர்களுள் சிலர்கூட தாம் யாருக்கு வாக்குப் போடுவது எனத் தெரியாமல் இருந்தனர். உண்மையில் மக்களைத் தேசமாகத் திரட்டுவதற்கு இத்தகைய வேலைத்திட்டமே அவசியமாகும். தலைவர்கள் பரப்புரைக் கூட்டங்களுக்கும் ஊடகங்களுக்கும் அளித்த முக்கியத்துவத்தை தேர்தலில் வெற்றிபெறுவதற்கான அடிமட்ட வேலைத்திட்டங்களில் காட்டத்தவறிவிட்டார்கள் என்பதே உண்மை. இப்பின்னடைவுகூட மக்கள் மத்தியில் பொதுக்கட்டமைப்பில் கட்சிகள் இணைவு தொடர்பான ஐயத்தை மேலும் வலுப்படுத்தும் ஒன்றாகவே பெரிதும் பேசப்பட்டது இக்கட்டமைப்பில் எண்பதுக்கும் அதிகமான சிவில் அமைப்புகள் இணைந்ததாகச் கூறப்பட்டது. அவற்றுள் ஒருசில அமைப்புகளைத் தவிர வேறு அமைப்புகள் செயற்பாட்டில் இறங்கியதாகத் தென்படவில்லை. அத்துடன் பல சிவில் அமைப்புகள் தங்களை அழைக்கவில்லை என்றும் குறைகூறியிருந்தன.

பொதுக்கட்டமைப்பில் பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டாதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் அக்குழுக்கள் ஒவ்வொன்றும் தமது பணிகளை முறைப்படி ஆற்றினவா என்பது கேள்விக்குறி. அதேபோல ஜனநாயகரீதியாக தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருக்கவில்லை எனவும் அதனால் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பாக எதுவும் தமக்குத் தெரியாதெனவும் கட்டமைப்பிலுள்ள சில சிவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நொறுங்கிய இதயங்களை மீண்டும் இணைக்கும் அன்பின் கயிறு!

மெலனி மானெல் பெரேரா



"சூரியன் உதிக்கும் போது மட்டுமல்ல, கருமையான இருளிலும் கூட, ஓடுங்கடா என்ற குரல். குண்டுகள் மற்றும் மோட்டார் தாக்குதல்களின் சத்தம் கேட்கும்போது, என்ன நடக்கப் போகிறது என்பதைப் பற்றி சிந்திக்க கூட எங்களுக்கு நேரம் இருக்கவில்லை. நாங்கள் காடுகளுக்குள்ளும், பதுங்குக் குழிகளுக்குள்ளும் பதுங்கிக்கொள்வோம். விடியும்வரை கொசுக்களின் (நுளம்பு) கடியுடன் கண்விழித்திருப்போம். துப்பாக்கிச் சூடுகளின் சத்தம் முடிந்தவுடன் அல்லது சூரியன் தன் தலையை உயர்த்த ஆரம்பிக்கும் போது பயத்துடன் எங்கள் வீடுகளை நோக்கி நடையெடுப்போம். சில சமயங்களில் வீட்டிற்குத் திரும்பும் போது, நாங்கள் ஓடும்போது விட்டுச் சென்ற வீடா இது வீடு என்று எங்களுக்குள்ளேயே கேள்வி கேட்போம். முன்பின் அறிந்திராத ஒரு நபரை கண்டாலே பயந்து நடுங்கிப்போன நாங்கள் இப்போது, அமைதி, அன்பு, நிறைவுடன் மகிழ்ச்சியாக வாழ்கின்றோம். கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தின் ஐயங்கேணி கிராம சேவகர் பிரிவின் இருபுறங்களிலும் வாழும் பல தமிழ் மற்றும் முஸ்லிம் குடிமக்கள் கூறிய ஆழமான வார்த்தைகள் இவை. யுத்தம் முடிவடைந்து 15 வருடங்கள் கடந்துள்ள நிலையில் இந்த வார்த்தைகள் வெறும் வார்த்தைகளாக சிலருக்குத் தோன்றலாம். ஆனால், "போர் காலம் மற்றும் போருக்குப் பிந்தைய காலம்" தொடர்பாக சிறந்த பார்வைக் கொண்ட ஒருவரால் அதன் 'உண்மையை' தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும்.

**யுத்தம் ஒரு பிளவு கோடு**

30 வருடகால யுத்தமானது நாட்டிலுள்ள அனைத்து உயிர்களையும், உடைமைகளையும் பாரபட்சமின்றி அழித்தது. குறிப்பாக வடக்கு கிழக்கில் மிக மோசமான முறையில் பாதிப்பை ஏற்படுத்தியது. தமிழர்கள் உட்பட சிங்கள மற்றும் முஸ்லிம் சமூகங்களுக்கு இடையில் ஆரம்பத்திலிருந்த நம்பிக்கையும், நல்லெண்ணமும் சிதைந்து, உடைந்து போயுள்ளது. அவர்களுக்கிடையிலான கொடுக்கல் வாங்கல் மற்றும் நட்புறவும் சிதைந்து போயுள்ளது. இதற்கு மட்டக்களப்பு மாவட்டத்தின் ஐயங்கேணி பிரதேசம் ஒரு சிறந்த உதாரணமாகும்.

"அந்தக் காலத்தில் சிங்களவர், தமிழர், முஸ்லிம் என அனைவரும் நிம்மதியாக வாழ்ந்தோம். அந்தப் போருக்கு முன்பு அனைவரும் ஒரே சந்தையில் வியாபாரம் செய்தோம். கொடுக்கல் வாங்கல் செய்தோம். ஒன்றாக பண்டிகைகளை நடத்தினோம். இந்துக்களாகிய எங்களின் பண்டிகைகளுக்கு முஸ்லிம் மக்கள் வந்தார்கள். ரமழான் பண்டிகைக்கு நாங்கள் சென்றோம். உணவு பரிமாற்றிக் கொண்டோம். நாங்கள் அன்புடன் வாழ்ந்தோம்" என்று ஐயன்கேணி கிராமத்தைச் சேர்ந்த தமிழ் மூத்த பெண்மணி முத்துமாரி கூறினார்.

10 வயதிலிருந்தே போரை அனுபவித்த மற்றும் கணவனை இழந்த ஒரு பிள்ளைக்கு தாயான ஜோசப் மயூரா கூறுகையில், "துப்பாக்கிச் சத்தமும் வெடிகுண்டு சத்தமும் எனக்கு மிகவும் பரிச்சயம். எங்கள் தாய்மார்கள் தங்கள் கைகளில் கிடைத்ததை எடுத்துக்கொண்டு எங்களையும் இழுத்துக்கொண்டு பாடசாலைகள் மற்றும் முகாம்களுக்கு ஓடியது இன்றும் நினைவில் இருக்கிறது. துப்பாக்கிச் சத்தம், குண்டுகள் வெடிக்கும் சத்தம் கேட்டதும், நாங்கள் பயந்தோம்.







இதற்கிடையில், இரு தரப்பிலிருந்தும் சிலர் பாதுகாப்புப் படையின் சில அதிகாரிகளுடன் சேர்ந்து பொய்யான வதந்திகள் பரப்பி ஒருவர் ஒருவரை துன்புறுத்தினார்கள், கிராமங்களுக்குள் நுழைந்து வீடுகளைச் சேதப்படுத்தினர், நிலத்தைக் கைப்பற்றினர், விலங்குகளைத் திருடிக் கொன்றனர்.

இந்தப் பின்னணியில் ஐயங்கேணி கிராமத்தில் மட்டும் பெண்கள், ஆண்கள், இளைஞர்கள், பெரியவர்கள் என 198 பேரின் வாழ்வில் மிகக் கொடூரமான முடிவுகளை ஏற்படுத்தியது. அவர்கள் காணாமல் போயிருக்கிறார்களா அல்லது உயிருடன் இருக்கிறார்களா என்பது உறுதியாகத் தெரியவில்லை - அவர்களில் 145 பேர் பல்கலைக்கழக மாணவர்கள், உயர்கல்வி படித்தவர்கள், உயர் வேலைகளில் ஈடுபட்ட ஆண்களும் பெண்களுமாகும். அரச படைகளுக்கும் தமிழ் போராளிகளுக்கும்



இடையில் ஏற்பட்ட மோதலில் காயமடைந்து அசைய முடியாது ஒரே இடத்தில் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கும் ஆண்களும் பெண்களும் உள்ளனர். அவர்கள் எவருக்கும் போரிட்ட தரப்பினரிடமிருந்தோ, அரசாங்கத்திடமிருந்தோ எந்தவித நிவாரணமும் கிடைக்கவில்லை.

**யுத்தத்தின் பரிசாக கிடைத்த ஆதரவற்ற நிலை**

யுத்த வெற்றியானது எதிரிக்கும் அதன் செயல்களுக்குமானதே தவிர நாட்டு பொதுமக்களின் உயிர்களுக்கான வெற்றி அல்ல. யுத்தமானது, தொடர் வலியையும், நொறுங்கிய இதயங்கள் மற்றும் முடிவில்லாத உயிர் மற்றும் சொத்து இழப்புக்களையே விட்டுச் சென்றது.

ஐக்கிய நாடுகளின் மதிப்பீட்டின்படி, மே 18, 2009 இல் முடிவடைந்த இலங்கையின் நீடித்த ஆயுத மோதலின் "இறுதி மாதங்களில்" வடக்கு - கிழக்கில் 40,000 முதல் 70,000 வரையிலான பொதுமக்கள் இறந்தனர், மேலும் 30 ஆண்டுகால கொடூரமான யுத்தத்தினால் 150,000 கொல்லப்பட்டனர். பெண்கள் உட்பட சுமார் 65,000 ஆண்களும் பெண்களும் காணாமல் போயுள்ளனர். 2020இன் வடக்கு கிழக்கு பிரதேச செயலகத் தரவுகளின்படி கிழக்கில் குடும்ப தலைமைத்துவ பெண்கள் 127,000 ஆயிரம். அவர்களில் 51,000 ஆயிரம் பேர் மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் வாழ்கின்றனர். இவ்வாறு குடும்ப தலைமைத்துவ பெண்களாக மாறியவர்களுக்கு நிலையான உதவிகள் எதுவும் இன்மையால் மிகவும் துன்ப நிலையில் வாழ வேண்டியுள்ளது.

போருக்குப் பிறகு ஐயங்கேணி பிரதேச தமிழ் முஸ்லிம் மக்கள் மிகவும் அச்சத்தில் வாழ்ந்தனர். மேலும், தமிழ் பிரதேசத்துக்குள் முஸ்லிம்கள் நுழைவது, முஸ்லிம் பிரதேசத்துக்குள் தமிழர்கள் நுழைவது கண்டிப்பாகத் தடைசெய்யப்பட்டிருந்தது. இதை இருதரப்பு இளைஞர்களும் செய்ததனால் சாதாரண பொது மக்களுக்கு மிகவும் கவலையளித்திருந்தது. இந்த நிலைமையினால் இரு இனத்துக்கும் இடையில் விரிசல் தீவிரமடைந்து, "இரு தரப்பினருக்கு இடையேயான அன்புறவு பாதிப்படைந்து வெறுப்பு உருவாகியது" என்கிறார் ஐயன்கேணி பாரதிபுரத்தில் வசிக்கும் 38 வயதான கணேசமூர்த்தி மைதிலி.

**மீளெழுவதற்கு உதவிய கரங்கள்**

போருக்குப் பின்னர், இலங்கை அரசாங்கமானது வெளிநாடுகள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபை, உலக

(11ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(10ம் பக்கத் தொடர்ச்சி)

உணவுத் திட்டம் மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் உட்பட மனிதாபிமான உதவிகளை வழங்கும் வெளிநாட்டு அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவிகளை பெற்று, "மீள்குடியேற்றம், புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு" என்ற பிரதான தொனிப்பொருளின் கீழ் பல்வேறு பெயர்களில் அழைக்கப்படும் பல்வேறு திட்டங்களின் ஊடாக வடக்கு மற்றும் கிழக்கு இடம்பெயர்ந்தோர் முகாம்கள் மற்றும் பிற இடங்களில் வசித்த பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்கியது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஐயங்கேணி கிராமத்தில் வசிக்கும் 35 முஸ்லிம், தமிழ், இளைஞர்கள் மற்றும் முதியோர்கள் மற்றும் ஆண்களிடம் நடத்திய நேர்காணல்களில், போரில் பாதிக்கப்பட்டவர்களுக்கு சமுர்த்தி உதவி மற்றும் கணவரை இழந்த பெண்களுக்கு ஓரளவு நிதியுதவி கிடைத்த போதிலும் தற்கால வாழ்க்கைச் செலவுக்கு எந்தவகையிலும் போதுமானதாக இல்லை என்று கூறினர். தொற்றுநோய், இயற்கை அனர்த்தம் போன்ற விஷேட சந்தர்ப்பங்களில் அரசு நிவாரணங்கள் ஏதும் கிடைக்கப்பெற்றாலோ தவிர தற்போதைய நிலைக்கு அரசின் எந்த உதவிகளும் கிடைப்பதில்லை என தெரிவிக்கின்றனர்.

தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் சமாதானம் மற்றும் நிலையான அபிவிருத்திக்கான மக்கள் கலந்துரையாடலின் முன்னாள் தேசிய இணைப்பாளர் அன்டனி ஜேசுதாஸன் விளக்கமளிக்கையில், "எனது அனுபவத்தின் படி, வடக்கு - கிழக்கு மாகாணங்களில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற நேரடி எதிர்பார்ப்புடன் எவரும் அந்த மக்களுக்கு உதவவில்லை. நிறுவனங்கள் அவர்களது சொந்தத் திட்டங்கள் மூலம் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தினார்கள். அவை நீண்டகால இலக்குகள் அல்ல. எனினும், யுத்த சூழ்நிலையினால் பாதிக்கப்பட்ட அனைத்து சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் நிதித் தேவைகள் ஏதோ ஒரு வகையில் பூர்த்திசெய்யப்பட்டன. அவை தற்காலிக பலமும் ஆறுதலுமாகும்.

"நல்லிணக்கம் கட்டியெழுப்பப்பட வேண்டும், பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கை நிலை உயர்த்தப்பட வேண்டும், ஒன்றாக இணைந்து செயற்பட வேண்டும்", என்ற விவாதங்கள் நடத்தப்பட்டன. ஆனால், நிலையான நீண்டகால இலக்குகளாக உண்மையான நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதற்கான திட்டங்கள் தொடங்கப்படவில்லை. தெற்கில் இருந்து அமைப்புகள் வட கிழக்கு பிரதேசங்களுக்குச் சென்று பல்வேறு திட்டங்களை செயல்படுத்துகின்றன. எனினும், வடக்கு மற்றும் கிழக்கு மக்கள் முன்வைக்கின்ற உண்மையான நல்லிணக்கத்துக்கான சந்தர்ப்பங்கள் எதுவும் இவர்களின் வேலைத்திட்டங்களில் இல்லை என்பது தெளிவாக அவதானிக்கப்படுவதாக அவர் மேலும் விளக்கினார்.

போரினால் பாதிக்கப்பட்டவர்கள் தற்போது குறிப்பிட்ட மட்டத்தில் அபிவிருத்தி நிலையில் வாழ்ந்து வருவதால் அவர்களுக்கான புதிய வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை என புனர்வாழ்வு மற்றும் மறுசீரமைப்பு அமைச்சு மற்றும் விவசாய அமைச்சுக்கள் தெரிவித்தன.

அரசசார்பற்ற நிறுவனங்கள், சமய நிறுவனங்கள் வழங்கிய மற்றும் தற்போது அவ்வப்போது வழங்கப்பட்டு வருகின்ற பொருளாதார உதவிகளினால் சற்று தலை நிமிர்ந்து வாழ்கின்ற போதிலும் தற்போதைய அரசாங்கம் அல்லது முன்னாள் அரசாங்கத்தினால் பொருளாதார ரீதியில் அல்லது கல்வி கற்கும் பிள்ளைகளின் எதிர்காலத்தைப் பலப்படுத்துவதற்கான நிலையான வேலைத்திட்டங்கள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லையென இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

பாரதிபுரத்தில் வசிக்கும் உதய ராஜிதாவின் கூற்றுப்படி, போருக்குப் பிறகு நீண்டகாலத்துக்குப் பின்பு ஐயங்கேணி கிராமத்தில் வசிக்கும் இரு தரப்பினருக்கும் இடையே சில புரிதல்கள் உருவாகத் தொடங்கியுள்ளன. அரசு மற்றும் அரசசார்பற்ற பல்வேறு நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களே அதற்கு காரணமாகும்.

"அந்தத் திட்டங்கள் அனைத்திலும் பார்க்கிலும் அண்மையில் மட்டக்களப்பு கரித்தாஸ் நிறுவனம் செயற்படுத்திய ஒரு செயற்திட்டமானது நாம் மீள முன்னேறுவதற்கு எமக்கு சிறந்த வழிகாட்டுதலை வழங்கியது. யுத்தத்தின் போது முஸ்லிம், தமிழ் எம்மிடையே ஏற்பட்ட பல காயங்களை ஆற்றுவதற்கு இந்த நிறுவனத்தின் நிகழ்ச்சிகள் மற்றும் வீட்டுத்தோட்ட செயற்பாடுகள் மிக உந்து சக்தியாக அமைந்தது என்று மிக்க மகிழ்ச்சியுடன் அவர் தெரிவித்தார்.

**அழிந்த வாழ்க்கையை பன்முகத்தன்மையினுள் மீள கட்டியெழுப்புதல்**

ஐயங்கேணி தமிழ் கிராமத்தைச் சேர்ந்த ஞானப்பிரகாசம் விஜயா கூறியதாவது: கரித்தாஸ் நிறுவனத்தின் கீழ் இந்த ஆண்டு ஜனவரி மாதம் அறிமுகப்படுத்தப்பட்ட இயற்கை வீட்டுத்தோட்ட திட்டமானது ஐயங்கேணி மக்களின் வாழ்வில் புதிய விடியலை ஏற்படுத்திக் கொண்டு இருக்கிறது.

"நாங்கள் ஒரு குழுவாக இயற்கை வீட்டுத்தோட்ட செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளோம். அந்தக் காய்கறிகள்



மற்றும் பழங்களை உண்பதால் குடும்பத்தில் உள்ள அனைவரும் ஆரோக்கியமாக வாழ்கிறோம். எங்களது தேவைகளைப் பூர்த்திசெய்த பின் அயல் கிராமங்களுக்கு எங்களது இயற்கை காய்கறிகள் மற்றும் பழங்களை குறைந்த விலையில் விற்கிறோம். இதனால் இப்போது எங்களிடம் நிதிச் சேமிப்பு உள்ளது" என்றார் விஜயா.

மரக்கறிகள் மற்றும் பழங்களின் விலைகள் வானுயர்ந்து காணப்படுகின்ற அதேவேளை, நாட்டில் உணவுப் பிரச்சினை ஏற்பட்டுள்ள நிலையில், கரித்தாஸ் மட்டக்களப்பு தனது கிராமத்தில் வாழும் முஸ்லிம் மற்றும் தமிழ் மக்களுக்கு உதவி கரம் நீட்டியது மாத்திரமல்லாது பிரிந்திருந்த உறவுகளை இணைக்கவும் பாலமாக அமைந்துள்ளது என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

ஐயங்கேணி கிராமத்தில் தமிழர்கள் மற்றும் முஸ்லிம்களின் குடியேற்ற முறைப்படி, இரண்டு பகுதிகளாக அறிமுகப்படுத்தப்பட்டாலும், இஸ்லாமிய பகுதியைச் சேர்ந்த 31 குடும்பங்களும், கரித்தாஸுடன் தொடர்புடைய தமிழ் பகுதியைச் சேர்ந்த 26 குடும்பங்களும் நேரடியாகவும், மறைமுகமாக பல குடும்பங்களும் இயற்கை வீட்டுத்தோட்ட திட்டத்தினால் பெரிதும் பயனடைந்துள்ளனர் என மட்டக்களப்பு கரித்தாஸ் - மனித மற்றும் பொருளாதார அபிவிருத்தி நிலையத்தின் பணிப்பாளர் அருட்திரு செம்சன் ஜெயநிக்ஷன் தெரிவித்தார்.

"இந்தப் பெண்கள் தங்கள் வீடுகளில் இயற்கை தோட்டம் செய்கிறார்கள், முஸ்லிம் மற்றும் தமிழ் குழுவினர் இணைந்து 04 பொதுவான பண்ணைகளையும் நடத்துகின்றன. அவர்கள் பண்ணையின் அனைத்து வேலைகளையும் பகிர்ந்து கொள்கிறார்கள், நாட்களையும் நேரத்தையும் ஒதுக்குகிறார்கள் மற்றும் பண்ணையின் வளர்ச்சிக்கு தாராளமாக பங்களிக்கிறார்கள். ஏனெனில், இந்தப் பண்ணைகள் மூலம் கிடைக்கும் வருமானம் சரி சமமாக பிரிக்கப்படும் முறை உருவாக்கப்பட்டுள்ளதாக அருட்தந்தை தெரிவித்தார்.

"இந்தத் திட்டங்களின் மூலம், அவர்கள் போரின் போது இழந்த செல்வம், மதிப்புகள், கலாச்சாரம் மற்றும் பெறுமதிமிக்க வாழ்க்கையை அவர்கள் திரும்பப் பெறுகிறார்கள். அது தொடர்பாக நான் மகிழ்ச்சியடைகிறேன். ஏனென்றால், மக்களைக் குணப்படுத்துவதும் அவர்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதும் மதங்களின் மைய கருப்பொருளாகும் என்று அருட்தந்தை மேலும் கூறினார்.

ஐயங்கேணி கிராமத்தில் பெண்கள் ஒன்றிணைந்து முன்னெடுக்கின்ற இயற்கை விவசாயம் மற்றும் சந்தைப்படுத்தல் பணிகளைப் பாராட்டிய கிராம சமாதான குழுவின் அதிகாரி என்.கமல், தனது கிராம மக்கள் மத்தியில் சமாதானத்தை மீள கட்டியெழுப்புவதற்கு மற்றும் வலுவான பொருளாதாரத்தை நிலைநிறுத்துவதற்காக முன்னெடுக்கப்படும் இந்த மகத்தான பங்களிப்பைப் பாராட்டினார். மட்டக்களப்பு மாவட்டத்தில் காணப்படுகின்ற ஏனைய கிராமங்களிலும் இச்செயற்பாட்டை முன்னெடுப்பது மிக முக்கியம் என்றார்.

இவ்வாறானதொரு நடவடிக்கையானது இயற்கை விவசாயத்தின் மூலம் நொறுங்கிய இதயங்களுக்கு ஒரு சிறப்பான பங்களிப்பாகும் என ஏறாவூர் அல் மத்ரஸல் முஹம்மதியாவின் கே.எம்.எம்.கபீர் மௌலவி தெளிவாக்கினார்.

விஷமில்லா இயற்கை உணவைப் பயன்படுத்துவது பற்றி திருக்குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ளது. முஸ்லிம்கள் மட்டுமல்ல, அனைத்து மக்களும் நோய்வாய்ப்படாமல் ஆரோக்கியமாக இருக்க விஷமில்லாத இயற்கை உணவுகளை உட்கொள்ள வேண்டும் என்று முஹம்மது நபி தெளிவாகக் கூறியுள்ளார் என்று மேலும் கபீர் மௌலவி கூறினார்.

தற்போது உள்ளூர் முஸ்லிம் மற்றும் தமிழ் சமூகங்களுக்கிடையில் காணப்படும் ஒற்றுமை மற்றும் புரிந்துணர்வுக்கு தனது பாராட்டுக்களை தெரிவித்த ஏறூர் விகாரையின் (புண்யாராமயின்) விகாராதிபதி தம்பகல்லே வனரதன தேரர், இயற்கை வீட்டுத்தோட்டங்கள் போன்ற நல்லதொரு செயற்பாட்டின் மூலம் இரு தரப்பினரையும் ஒன்றிணைத்த கரித்தாஸ் நிறுவனத்துக்கு நன்றி தெரிவித்தார்.

"பார்ப்பதற்கு அழகாகத் தெரிந்தாலும், இவ்வளவு காலம் நாம் நச்சான உணவுகளையே சாப்பிட்டு வருகிறோம். இதனால் நமக்கும் நம் குழந்தைகளுக்கும் பல நோய்கள் ஏற்படுகின்றன. ஆனால், நமக்கு அறிமுகப்படுத்தப்பட்ட இயற்கை வேளாண்மையால் இப்போது நாம் அனைவரும் நச்சற்ற புதிய காய்கறிகள் மற்றும் பழங்களை சாப்பிடுகிறோம். இதன் சிறப்பு என்னவென்றால், எங்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையே ஒரு பெரிய தொடர்பு, ஒருமைப்பாடு உருவானது, அது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது" மட்டக்களப்பு ஐயங்கேணி முஸ்லிம் பிரதேசத்தில் வசிக்கும் முஸ்லிம் பெண்களான சுல்பிகா மற்றும் மர்/கா ஆகியோரின் மகிழ்ச்சியின் வெளிப்பாடு இது. இவர்கள் கரித்தாஸ் இயற்கை வீட்டுத்தோட்டத்தினால் பயனடைகின்றனர்.

ஐயங்கேணி முஸ்லிம் பகுதியில் வசிக்கும் 31 முஸ்லிம் குடும்பங்களைச் சேர்ந்த சுல்பிகா மற்றும் மர்கா ஆகியோர் மிக மகிழ்ச்சியுடன் போஞ்சி, கத்தரி, பயிற்றங்காய், பீக்கங்காய் கருவேப்பிலை, முருங்கைக்காய், கீரைகள் மற்றும் நிலக்கடலை போன்ற புதிய காய்கறிகளை ஜூன் 29 அன்று முதல் முறையாகத் திறந்த மக்கள் சந்தையில் தங்களின் மற்றொரு வெற்றியாக விற்பனைக்கு வைத்தனர். மேலும், அவர்களின் தோட்டத்திற்கு தேவையான உரங்கள், விதைகள் மற்றும் உபகரணங்களையும் வைத்திருந்தனர்.

ஐயங்கேணி முஸ்லிம் பகுதியைச் சேர்ந்த துமுரி, சுல்பிகா, ஹம்ஷியா, மர்கா போன்றோரும், தமிழ்ப் பகுதியைச் சேர்ந்த ராஜிதா, மைதிலி, மயூரா, விஜயா போன்றோரும் இத்திட்டமானது சமூக, பொருளாதார ரீதியில் தங்கள் வாழ்வில் உண்மையான வளர்ச்சியையும், மகிழ்ச்சியையும், ஆன்மீகத்தையும், அமைதியையும் கட்டியெழுப்புவதில் வெற்றி பெற்றுள்ளது என்றனர்.

"ஒன்றாக வாழ்ந்த முஸ்லிம் - தமிழர்களாகிய நாங்கள் வீட்டுத் தோட்டத்தின் மூலம் எங்கள் நொறுங்கிய இதயங்களில் மறைந்த பழைய அன்பை மீட்டெடுக்க முடியும். நாங்கள் இப்போது ஒன்றாக வேலை செய்கிறோம். குழந்தைகள் ஒன்றாக பள்ளிக்குச் செல்கின்றனர், ஒன்றாக விளையாடுகின்றனர், ஒன்றாக மகிழ்ச்சியாக இருகின்றோம், ஒன்றாக வாழ்வை வெல்கின்றோம்" இது மட்டக்களப்பு, ஐயங்கேணி கிராமத்தின் தமிழ், முஸ்லிம் சமூகத்தின் நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்தியின் உண்மைக் குரல்.

(மாற்றம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதலினால் காதல் செய்வீர்...மழலை பெறுவீர்... புடினின் போர்க்கால வேண்டுதல்!

ரஷ்யாவில் பிறப்பு விகிதத்தை அதிகரிக்க, காதல் செய்வீர், மழலை பெறுவீர், எனும் புட்டினின் போர்க்கால வேண்டுதல் என்பது வெறுமனே இனத்தொகையை கூட்டுவது மட்டுமன்றி, நீண்ட கால போர்த் திட்டத்திற்கு அமைய ரஷ்ய இராணுவத்தை பலமாக்குவதாகும் என்றே மேற்குலக அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின், நாட்டின் இன வீழ்ச்சியை எதிர்த்துப் போராட, வேலை இடைவேளையின் போது உடலுறவு கொள்ளுமாறு ரஷ்யர்களை வலியுறுத்தும் கொள்கையை அறிமுகப்படுத்தி உள்ளமை சர்வதேச ரீதியில் சர்ச்சையை உருவாக்கி உள்ளது.

ரஷ்யாவின் பிறப்பு விகிதம் குறைந்து வருவதற்கு பதிலளிக்கும் விதமாக, ஒரு அசாதாரண முயற்சியை ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தொடங்கியுள்ளார். ரஷ்யர்கள் தங்கள் வேலை இடைவேளையின் போது உடலுறவு கொள்ள ஊக்குவிக்க வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

அதுவே தற்போது பலராலும் விமர்சிக்கப்படும், வேலை இடைவேளையின் போது உடலுறவு கொள்ளுமாறு ரஷ்யர்கள் வலியுறுத்தப்படுகிறார்கள் எனும் புட்டினின் அறிக்கையை உலகம் பல்வேறு கோணங்களில்



பார்க்கிறது.

இந்நடவடிக்கையானது ரஷ்ய நாட்டின் கருவுறுதல் விகிதத்தை நிவர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது தற்போது ஒரு பெண்ணுக்கு சுமார் 1.5 குழந்தைகளாக உள்ளது. ரஷ்ய மக்கள்தொகை நிலைத்தன்மைக்கு தேவையான 2.1 விகிதத்தை விட குறைவாகவே உள்ளது.

ரஷ்ய மக்களைப் பாதுகாப்பதே எங்கள் மிக உயர்ந்த தேசிய முன்னுரிமை என்று புட்டின் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவின் எதிர்கால தலைவிதி நம்மில் எத்தனை பேர் சுகதேகியாக இருப்போம் என்பதைப் பொறுத்தது. இது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்னை எனவும் ரஷ்ய ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

இதனை நிவிர்த்தி செய்யவே, பிறப்பு விகிதத்தை அதிகரிக்க வேலை இடைவேளையின் போது உடலுறவு கொள்ளுமாறு ரஷ்யர்கள் வலியுறுத்தப்பட்டனர் எனும் அறிக்கையால் பலர் வியப்புக்குள்ளாகினர்.


உக்ரைனில் நடந்து வரும் மோதலால் ஒரு மில்லியனுக்கும் அதிகமான இளைய குடிமக்களின் குடியேற்றத்தால் மோசமாகிவிட்ட ரஷ்யா மக்கள்தொகை வீழ்ச்சியை எதிர்கொண்டுள்ள நிலையில் இந்த வேண்டுதல் வந்துள்ளது.

ரஷ்ய மக்கள்தொகை சரிவை மாற்றியமைப்பது ஒரு முதன்மையான தேசிய முன்னுரிமை என்று புட்டின் தெளிவுபடுத்தியுள்ளார். நாட்டின் எதிர்காலம் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்பதைப் பொறுத்தது என்று அறிவித்தார்.

இதேவேளை ரஷ்ய சுகாதார மந்திரி டாக்டர் யெவ்ஜெனி ஷெஸ்டோபலோவ் புதிய பிறப்பு கொள்கையை ஆதரிக்கிறார். குழந்தைகள் இல்லாததற்கு வேலைப்பளு என்பதனை நிராகரித்தார். வேலை இடைவேளையின் போது குழந்தைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்றார்.

இந்த புதிய கொள்கையானது பிறப்பு விகிதத்தை அதிகரிப்பதற்கான பரந்த கிரெம்ளின் முயற்சியின் ஒரு பிரச்சார விடயமாகும். மாஸ்கோவில் உள்ள பெண்களுக்கு அவர்களின் இனப்பெருக்க ஆரோக்கியத்தை மதிப்பிடுவதற்கு இலவச கருவுறுதல் சோதனைகள் இப்போது வழங்கப்படுகின்றன.

அத்முடன் ரஷ்ய பாராளுமன்ற உறுப்பினர் தட்யானா பூட்ஷ்கயா, முதலாளிகள் தங்கள் ஊழியர்களின் பிறப்பு விகிதங்களைக் கண்காணித்து அறிக்கையிட வேண்டும் என்று முன்மொழிந்து உள்ளார். இது ஒவ்வொரு ஆண்டும் பிறப்புகளின் எண்ணிக்கையை உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது என அவர் தெரிவித்தார்.




**ரஷ்ய ராணுவத்தை உலகின் இரண்டாவது பெரிய ராணுவமாக விரிவுபடுத்த புட்டின் நடவடிக்கை எடுத்துள்ளார். ரஷ்ய துருப்புக்களின் எண்ணிக்கையை 180,000 ஆல் அதிகரிக்கவும், மொத்தப் படையை 2.38 மில்லியனாக உயர்த்தவும், 1.5 மில்லியன் துணை படையையும் இந்த திட்டம் உருவாக்கிறது. இதன் பிரச்சார யுக்தியாகவே காதல் செய்வீர், மழலை பெறுவீர், எனும் புட்டினின் போர்க்கால வேண்டுதல் வெளிவந்துள்ளது.**






ஐங்கரன் விக்கினேஸ்வரா

செலாயன்பின்ஸக் பகுதியில், இளம் பெண்களுக்கு அவர்களின் முதல் குழந்தை பிறந்ததற்கு +8,500 பவுண்ட்ஸ் ஊக்கத்தொகையாக வழங்கப்படுகிறது. அதேவேளை கருக்கலைப்புகளை அணுகுவதையும், விவாகரத்து கட்டணத்தை அதிகரிப்பதையும் ரஷ்ய அரசாங்கம் கடினமாக்குகிறது. அத்துடன் அரசியல் பொது நபர்கள் மற்றும் தேவாலயத் தலைவர்கள் அதிக பிறப்பு விகிதங்களை ஒரு தேசிய கடமையாக்க வாதிடுகின்றனர்.

அன்னா குஸ்னெட்சோவா மற்றும் ஜன்னா ரியாப்ட்சேவா போன்ற ரஷ்ய அரசியல்வாதிகள் பெண்கள் இளம் வயதிலேயே குழந்தைகளைப் பெறத் தொடங்க வேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளனர்.

ரஷ்ய ராணுவத்தை உலகின் இரண்டாவது பெரிய ராணுவமாக விரிவுபடுத்த புட்டின் நடவடிக்கை எடுத்துள்ளார்.

ரஷ்ய ராணுவத்தை பெரிய அளவில் விரிவாக்கம் செய்ய அதிபர் புட்டின் திட்டமிட்டு உள்ளார். தற்போது ரஷ்ய துருப்புக்களின் எண்ணிக்கையை 180,000 ஆல் அதிகரிக்கவும், மொத்தப் படையை 2.38 மில்லியனாக




உயர்த்தவும், 1.5 மில்லியன் சுறுசுறுப்பான துணை படையையும் இந்த திட்டம் உருவாக்கிறது.

இது சீனாவைத் தொடர்ந்து ரஷ்யாவின் இராணுவத்தை உலகின் இரண்டாவது பெரிய இராணுவமாக மாற்றும்.

இந்த விரிவாக்கம் 2022ல் உக்ரைன் படையெடுப்பு தொடங்கியதில் இருந்து இராணுவ வீரர்களின் முந்தைய அதிகரிப்புகளைப் பின்பற்றுகிறது. நடந்து கொண்டிருக்கும் மோதல்கள் மற்றும் தற்போதைய உலகளாவிய நிலைமைகளுக்கு ஏற்பவும் தேசிய பாதுகாப்பை வலுப்படுத்தவும் இந்த விரிவாக்கம் ஒரு மூலோபாயத்தின் ஒரு பகுதியாகும் என ரஷ்ய ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார்.

### உக்ரைன் போரில் உயிரிழப்புகள்:

உக்ரைன் போரில் தொடர் உயிரிழப்புகள் அதிகரித்து வரும் நிலையில், ரஷ்ய பெண்களை எட்டு அல்லது அதற்கு மேற்பட்ட குழந்தைகளை பெற்றுக்கொள்ளுமாறு கடந்த வருடம் புட்டின் வலியுறுத்தி இருந்தார். ரஷ்ய பெண்கள் பெரிய குடும்பங்களைக் கொண்டிருப்பதே வரவிருக்கும் தசாப்தங்களில் எங்கள் இலக்கு என்றும் ரஷ்ய அதிபர் கூறியிருந்தார்.

ரஷ்யப் பெண்கள் எட்டு அல்லது அதற்கு மேற்பட்ட குழந்தைகளைப் பெற்று, பெரிய குடும்பங்களாக மாற்றுமாறு விளாடிமிர் புடின் வலியுறுத்தினார். சோவியத் உடைவின் பின்னர் 1990 களில் இருந்து ரஷ்யாவின் பிறப்பு விகிதம் சீராக குறைந்து வருகிறது.

ரஷ்ய மக்கள் தொகையை அதிகரிப்பது வரவிருக்கும் தசாப்தங்களுக்கு எங்கள் இலக்கு என்றும் புட்டின் கூறியிருந்தார். ரஷ்ய மக்களில் பலர் குடும்பத்தின் பாரம்பரியத்தை பராமரிக்கிறார்கள். அங்கு நான்கு, ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட குழந்தைகள் வளர்க்கப்படுகிறார்கள் என்றும் திரு புட்டின் கூறினார்.

முன்பு ரஷ்ய குடும்பங்களில் எங்கள பாட்டி மற்றும் கொள்ளு பாட்டிகளுக்கு 7 மற்றும் 8 குழந்தைகள் இருந்தனர் என்பதை நினைவில் கொள்க. இந்த மரபுகளைப் பாதுகாப்போம், புத்துயிர் பெறுவோம். பல குழந்தைகளைப் பெறுவது, ஒரு பெரிய குடும்பம், ரஷ்யாவின் அனைத்து மக்களுக்கும் ஒரு விதிமுறையாக, வாழ்க்கை முறையாக மாற வேண்டும் எனவும் புட்டின் கோரியிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடாவில் கவிஞர் ஆரணியின் நூல் வெளியீடு

குரு அரவிந்தன்



கனடாவில் உள்ள மார்க்கம் நகரில் அண்மையில் இலங்கையில் இருந்து வருகை தந்திருந்த முன்னாள் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் அவர்களின் (கவிஞர் ஆரணி) 'நினைவிடைத் தோய்தல்' என்ற கவிதை நூல் வெளியிட்டு வைக்கப்பெற்றது. இந்த நிகழ்வுக்கு பேராசிரியர் இ. பாலசுந்தரம் அவர்கள் தலைமை தாங்கினார். பிரதம விருந்தினராக மாகாணப் பாராளுமன்ற உறுப்பினரான திரு. லோகன் கணபதி கலந்து கொண்டார்.

நிகழ்வின் தொடக்கத்தில், கனடாவின் மதிப்புக்குரிய தமிழ்ப் பிரமுகர்களான பாஸ்டர் ஜெயானந்தசோதி, எழுத்தாளர் குரு அரவிந்தன், இயக்குனர் திரு. மதிவாசன் சீனிவாசகம், திரு. ப. ஜெயச்செல்வன், திருமதி. சுந்தரேஸ்வரி யோகராஜா, திருமதி. செல்வா அருள்ராஜசிங்கம், திருமதி. சந்திரிகா சின்னத்துரை, திருமதி. வனிதா சிவானந்தலிங்கம், திருமதி. ஜெயநிதி சிவானந்தசிங்கம், திரு கந்தசாமி இளந்திரையன், திருமதி. சிவரஞ்சிதம் ரஞ்சித் அலோசியஸ் ஆகியோர் இணைந்து இந்த நிகழ்வில் மங்கள விளக்கேற்றி வைத்தனர்.

மங்கள விளக்கேற்றியதைத் தொடர்ந்து தமிழ்த்தாய் வாழ்த்து, கனடிய தேசியப்பண், அகவணக்கம் ஆகியன இடம் பெற்றன. கனடிய தேசியப்பண், தமிழ்த்தாய் வாழ்த்து ஆகியன செல்வி மாதங்கி திருஞானசம்பந்தன் அவர்களால் இசைக்கப்பெற்றன. இதை அடுத்து பேராசிரியர் இ. பாலசுந்தரம் அவர்களின் தலைமையுரை இடம் பெற்றது. தொடர்ந்து ஆர். என். லோகேந்திரலிங்கம் அவர்களின் வரவேற்புரையும், அடுத்து பிரதம விருந்தினர் திரு. லோகன் கணபதி அவர்களின் உரையும் இடம் பெற்றது. அவர் தனது உரையில் 'தாம் வாழும் சமூகத்தின்மீது அக்கறை கொண்டவர்களே இலக்கிய வாதிகளாகப் பிரகாசிக்கின்றார்கள். இப்படியானவர்களின் பங்களிப்பு எமது சமூகத்திற்கு இன்று அவசியம் தேவைப்படுகின்றது' என்று குறிப்பிட்டார்.

இதைத் தொடர்ந்து சுருவில் மக்கள் ஒன்றியத்தின் திரு. கிருஸ்ணபிள்ளை திருவருள், கனடா - வேலணை ம.ம. வி பழைய மாணவர் சங்கம் சார்பாகத் திரு. சிவஞானம் இளஞ்செழியன், கனடா தமிழ் எழுத்தாளர் இணையத் தலைவர் க. ரவீந்திரநாதன், ரொறன்ரோ பல்கலைக் கழக தமிழ் இருக்கைக் குழு சார்பாக திரு. சிவன் இளங்கோ, ஐயப்பன் ஆலயம் சார்பாகத் திரு குருசாமி சுப்பிரமணியம், தென்புலோலியூர் கிருஸ்ணலிங்கம் ஆகியோரின் வாழ்த்துச் செய்திகள் இடம் பெற்றன.

இந்த நிகழ்வுக்கு அடுத்ததாக கவிஞர் அகணி சுரேஸ் அவர்களால் கவிதை நூல் பற்றிய அறிமுக உரையும், அதைத் தொடர்ந்து முனைவர் திருமதி. வாசுகி நகுலராஜா அவர்களால் நூல் ஆய்வுரையும் நிகழ்த்தப்பட்டன. தனது ஆய்வுரையில் சில கவிதை வரிகளை எடுத்துக் காட்டி ஆசிரியரைப் பாராட்டினார்.

டாக்டர் போல் ஜோசப் அவர்களின் நூல் நயப்புரையைத் தொடர்ந்து, நூலாசிரியரின் ஏற்புரையும் நன்றியுரையும் இடம் பெற்றன.

நூலாசிரியர் நிகழ்வை ஏற்பாடு செய்தவர்களுக்கும், வருகைதந்தவர்களுக்கும் நன்றி தெரிவித்தார். அதன் பின் நூல் ஆசிரியரால் சிறப்புப்பிரதிகள் வழங்கப்பட்டன. நிகழ்வுக்கு வருகை தந்தோருக்குச் சிற்றுண்டி வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியின் தொகுப்பாளராகத் திருமதி. ஜோதி ஜெயகுமார் பணியாற்றினார். ●

---



உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி

வியுக்தியார் பதில்கள்
ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
viyukthiyar@gmail.com

# வியுக்தியார் பதில்கள்

**இரா. ஜெயரூபன்,**
**பூந்தோட்டம், வவுனியா.**

**கேள்வி:** ஜனாதிபதித் தேர்தலில் எவர் வெற்றி பெற்றாலும் கடினமான சவால்களை அவர் எதிர்கொள்வார் என்று சர்வதேச நெருக்கடிக்குழுவின் இலங்கை தொடர்பான மூத்த ஆலோசகர் அலன் கீனன் என்பவர் கூறியுள்ளாரே. அப்படியெனில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டுவிட்டதாக கூறுவது பிழை என்கின்றீர்களா?

**வியுக்தியார்:** அவர் சொல்வதும் சரிதான். இவர் சொல்வதும் சரிதான். என்ன குழப்பமாக இருக்கின்றதா?. தான் வெற்றிபெறாமல் யார் வென்றாலும் அவர்களால் நாட்டை சரியாக கொண்டுபோக முடியாத அளவிற்கு தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்கனவே 'செக்" வைத்துவிட்டாரே. உதாரணமாக அரச உத்தியோகத்தர்களுக்கு ஜனவரியில் இருந்து சம்பள அதிகரிப்பை வாரி வழங்கியிருக்கிறார். அவர் இல்லாமல் மற்றயவர்கள் யார் வந்தாலும் அதனை கொடுத்தாக வேண்டும். எங்கே போவார்கள் பணத்திற்கு. தேவைக்கு ஏற்றமாதிரி பணநோட்டுக்களை அச்சிடவேண்டித்தானே இருக்கும். கொடுக்காமல் விட்டாலும் அரச உத்தியோகத்தர்கள் வீதிக்கு வந்துவிடுவார்கள். அதேபோலத்தான் இந்த கடன் மறு சீரமைப்பும். கடன் மறு சீரமைக்கவும் வேண்டும், தான் வராவிட்டால் மற்றயவர்கள் அதனையும் சரியாக செய்யமுடியாமல் இருக்கவேண்டும் என்று அல்லவா இவர் ஒவ்வொரு விடங்களையும் செய்திருக்கிறார். அதனால்தான் இவரே மீண்டும் வந்தாலும் கடினமான சவால்களை- அதாவது தான்போட்ட முடிச்சுக்களை அவிழ்ப்பதிலேயே சவால்களை எதிர்கொள்ள வேண்டிவரும் என்று எச்சரித்திருக்கிறார் என்று நினைக்கின்றேன்.

---

**சபா. சிவநாதன்,**
**குரும்பசிட்டி, தெல்லிப்பளை.**

**கேள்வி:** ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு இறுதி கட்ட தேர்தல் பிரசாரத்தில் பிரதான வேட்பாளர்களாக கருதப்படும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க ஆகியோர் கொழும்பை மையப்படுத்தி தமது பிரசாரக் கூட்டங்களை ஏற்பாடு செய்தனர் என்றும் இந்தக் கூட்டங்களுக்கு நாடு முழுவதும் இருந்து ஆதரவாளர்களை அழைத்து வருவதற்காக தனியார் பஸ்களை ஏற்பாடுசெய்திருந்ததாகவும், இதனால் தனியார் பஸ் உரிமையாளர்கள் 100 கோடி ரூபாவை வருமானமாக பெற்றுள்ளதாகவும் கூறப்பட்டதே. கவனித்தீர்களா?

**வியுக்தியார்:** இதில் கவனிப்பதற்கு என்ன இருக்கின்றது. அந்தக் காலத்தில் தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் தலைவர்களின் பேச்சுக்களைக் கேட்பதற்காகவே மைல் கணக்கான துாரங்களுக்கும் சைக்கிளில் சென்று கூட்டங்களை பார்த்த காலம் இனி மீண்டும் வரப்போவதில்லை. இப்போதெல்லாம் தேர்தல் கூட்டங்களுக்கு வருகிறீர்களா என்று மக்களைக் கேட்டால் எவ்வளவு தருவீர்கள் என்றல்லவா திரும்பிக்கேட்கிறார்கள். தேர்தல் பரப்புரைக் கூட்டங்களுக்கு ஆட்களைக் கொண்டுவந்து காட்டி, அதனை பார்ப்பவர்கள் மனதில் பிரமிப்பை ஏற்படுத்தி, அதன்மூலம் வாக்குப்பெறலாம் என்றுதான் அரசியல்வாதிகள் நினைக்கிறார்கள் போலும். ஆனால் அதற்காக ஒருநாளே 100 கோடி செலவிட்டார்கள் என்றால் கடந்த ஒரு மாதமாக எவ்வளவு செலவிட்டிருப்பார்கள் என்று நாம் கணக்குப் பார்க்கலாம். இந்த வியுக்தியாரை உறுத்துவதெல்லாம், அதனை எப்படி வெற்றிபெறுபவர்களோ மற்றயவர்னகளோ திரும்ப எடுக்கப்போகின்றார்கள் என்பதுதான்.

**எம். கௌதம்,**
**அமிர்தகழி, மட்டக்களப்பு**

**கேள்வி:** இலங்கை தமிழ் அரசுக் கட்சி கட்சியாகவே இருக்கிறது. கட்சிக்குள் என்ன நடக்கிறது என்பதை மக்கள்தான் புரிந்து கொள்ள வேண்டும் என்று இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் துணை தலைவரும் வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவருமான சீ. வீ. கே. சிவஞானம் தெரிவித்துள்ளாரே. ஆனால் கட்சிக்குள் என்ன நடக்கின்றது என்பதோ எனக்குப் புரியவில்லையே. உங்களுக்காவது புரிகின்றதா?

**வியுக்தியார்:** அவர் சொல்வதும் சரிதான். கட்சி கட்சியாகவே பாதுகாப்பாக நீதிமன்ற பெட்டகத்தில் இருக்கிறது தான். ஆனால் கட்சிக்குள் நடப்பது என்ன என்பது அவருக்குத் தெரியாததல்லவே. அண்மையில் சமூகவலைத்தளங் களில் அவர் யாருடனோ பேசிய தொலைபேசி உரையாடல் கசிந்து கட்சி விடயங்களை வெளியே கொண்டுவந்துவிட்டதால், மக்கள் புரிந்து கொள்ளவேண்டும் என்கிறார் என்றுதான் நினைக்கின்றேன். இந்த நாட்டின் ஜனாதிபதியை தெரிவுசெய்கின்ற தேர்தல் ஒன்றில்- அதாவது அடுத்த ஐந்து ஆண்டுகள் நமது பிரச்சினை பற்றி பேசவேண்டிய ஒருவரை தெரிவு செய்கின்ற தேர்தல் ஒன்றில் - கட்சி எடுத்த முடிவுக்கு எதிராக ஒவ்வொருவரும் தத்தம் விருப்பத்திற்கு ஏற்றவாறு செயற்படுகின்ற ஒரே கட்சி என்ற பெயரையும் தமிழ் அரசு கட்சி எடுத்துவிட்டது என்ற மகிழ்ச்சியோ தெரியவில்லை.

---

**கந்தையா முகுந்தன்**
**சுவாமியார் வீதி, கொழும்புத்துறை.**

**கேள்வி:** ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் சஜித் பிரேமதாசாவுக்கு ஆதரவு வழங்கும் முடிவை சுமந்திரன் தன்னிச்சையாகவே எடுத்ததாக் கூறப்படுகின்றது. ஆனால் அவரோ, தமிழர்களில் பெரும்பான்மையினர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவையே ஆதரிக்கின்றனர் என்று ஆங்கில பத்திரிகை ஒன்றுக்கு தெரிவித்திருந்தார். [illegible] தமிழ் மக்களின் விருப்பத்திற்கு மாறாகத்தான் அவர் முடிவெடுத்திருக்கிறார் என்று கருதலாமா?

**வியுக்தியார்:** அப்படி நான் நினைக்கவில்லை. ரணிலை தமிழ் மக்கள் விரும்புவதற்கான காரணத்தையும் அவர் அந்தப் பேட்டியில் சொல்லியிருக்கிறார். அவர் சஜித்தை ஆதரிக்க ஏன்முடிவெடுத்தார் என்பது அவருக்கு மாத்திரமே தெரிந்த விடயம். ஆனால் சஜித்துக்கு மக்கள் வாக்களித்தால், தான் கேட்டதால்தான் மக்கள் வாக்களித்தார்கள், இல்லையெனில் அவர்கள் ரணிலுக்குத்தான் வாக்களிக்க இருந்தார்கள் என்று சொல்லி பெருமைப்பட்டுக் கொள்ளலாம் என்று அவர் நினைக்கிறாரோ தெரியவில்லை. மாறாக ரணில் அதிகம் எடுத்தாலும், அது எனக்கு முதலே தெரிந்ததுதான், ஆனாலும் சஜித்துக்குத் தான் வாக்களிப்பது நல்லது என்றுதான் நான் சொன்னேன் என்று பதில்சொல்வதற்காகவே அவர் இதனை முன்கூட்டியே சொல்லியிருப்பாரோ தெரியவில்லை. அவர் சிறந்த சட்டத்தரணி அல்லவா?

---

**எம். அகிலேஸ்வரன்**
**சித்தன்கேணி.**

**கேள்வி:** இம்முறை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் மூன்று பிரதான வேட்பாளர்களையும் அதிகாரப் பகிர்வு குறித்த வாக்குறுதியைக் கொடுக்க வைத்திருக்கிறோம். எனவே மூவரில் எந்த வேட்பாளர் வென்றாலும், தீர்வினைப்பெற்றுக்கொடுப்பதை முன்னிறுத்திய நடவடிக்கைகளில் தமிழரசுக்கட்சி தொடர்ந்து ஈடுபடும் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளாரே. அப்படியெனில் அவர் எதற்காக சஜித் பிரேமதாசவை ஆதரிக்கும் முடிவை எடுத்தார்?

**வியுக்தியார்:** 'எக்கிய ராஜ்ய' என்பது ஒருமித்த நாடு, அதாவது அதுகும் சமஷ்டிதான். அதற்கு குறைந்த தீர்வை தொட்டும் பார்க்கமாட்டோம் என்றவர், இப்போது மூன்று வேட்பாளர்களும் அதிகாரப்பகிர்வு குறித்து வாக்குறுதி என்றும் அதுகும் தங்களால்தான் ஆனது என்றும் கூறுகிறார். அவர்கள் மூவருமே 13க்கு மேலே போவதாக வாக்குறுதி வழங்கவில்லை. இனி யார் வென்றாலும் அவர்களோடு 13 பற்றி பேசப்போகின்றார் அவர். அதுசரி, ஏன் அவர் சஜித்துக்கு ஆதரவு முடிவை எடுத்தார் என்று கேட்டிருக்கிறீர்கள். அவரே அதற்கும் பதில் சொல்லியிருக்கிறாரே கவனிக்கவில்லையா? சஜித்தான் அதிகம் தருவதாக சொல்லியிருக்கிறாராம். கிடைத்த பின்னர் அது எவ்வளவு என்று கேட்டு சொல்கின்றேன்.

---



**எஸ். செந்துஜன், ராசவீதி, கோப்பாய்.**


**கேள்வி:** வவுனியாவில் நடைபெற்ற தமிழ் அரசு கட்சியின் ஐவர்குழு முடிவை அறிவித்துவிட்டு, அதாவது சஜித்துக்குத் தான் ஆதரவு என்ற முடிவை அறிவித்துவிட்டு, மாவிட்டபுரம் திரும்பும் வழியில் கிளிநொச்சியில் நடைபெற்ற பொதுவேட்பாளர் பிரச்சாரக் கூட்டத்தில் 'தனது வாக்கு பொதுவேட்பாளருக்குத்தான்" என்று மாவை சேனாதிராசா பேசியதாக அறிந்தபோது உங்கள் மனதில் என்ன தோன்றியது?.

**வியுக்தியார்:** அப்படி தோன்றுவதற்கு என்ன இருக்கின்றது?. அது ஒரு கட்டுக்கோப்பான (அப்படி ஏதாவது இருக்கிறதா என்று கேட்டுவிடாதீர்கள்) கட்சியின் தலைவராக கட்சி முடிவை அறிவித்தார் அவர். ஆனாலும் தனிப்பட்ட மாவையாக- ஒரு தமிழின விடுதலைப் பேராளியாக- தான் பொதுவேட்பாளருக்குத்தான் வாக்களிப்பேன் என்றிருக்கிறார். இதில் என்ன தோன்றுவதற்கு இருக்கின்றது?. மாவையை நன்கு அறிந்தவர்களுக்கு அது ஒன்றும் ஆச்சரியத்தை தந்திருக்காது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பின் போது....







# தமிழ்த் தேசிய பொதுக்கட்டமைப்பின்....

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

அமைப்பு கள் பகிரங்கமாகத் தெரிவித்ததையும் அவதானிக்க முடிந்தது. ஒருசிலரின் தீர்மானங்களும் ஒருசிலரின் கடும் உழைப்பும் இங்கு காணப்பட்டது. இந்தத்தவறை அரசியல் கட்சிகள் செய்வதைத் தவிர்க்க வேண்டுமெனக் கூறிக் கொண்டு அதே தவறை பொதுக்கட்டமைப்பும் பின்பற்றுமா னால் எதிர்பார்க்கும் நோக்கத்தை அடைவது சிரமம்.

பொதுக்கட்டமைப்பு எதிர்பார்த்ததற்கு மேலாக புலம்பெயர் அமைப்புகள், உள்ளூர் அமைப்புகள் மற்றும் தனிப்பட்டவர்களின் ஆதரவும் வளங்களும் கிடைத்துள்ளன. ஆனால் அவற்றைச் சரியான முறையில் ஒன்றிணைப்பதற்கான வேலைத்திட்டங்கள் போதியளவு இருக்கவில்லை. அதனால் பொதுவேட்பாளர் தொடர்பான பல்வேறு நிகழ்வுகள் உதிரிகளாக இடம்பெற்று செலவுக்கேற்ற பயனைப் பெறத்தவறிவிட்டன. அத்துடன் தன்னார்வமாக பங்களிக்க விரும்பிய புலம்பெயர் அமைப்புகள் சிலவற்றின்மீதான ஐயம் அவற்றின் செயற்பாடுகளுக்கு முட்டுக்கட்டையைப் போட்டுவிட்டது. தேசமாக ஒன்றிணைக்க விரும்பும் நாம் சிற்சில காரணங்களைக்கூறி அவ்வாறு ஒதுக்கி வைப்போமானால் மேலும் சிதறுவதற்கன வழியை நாமே ஏற்படுத்துவதாக அமையும்.

தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பு என்பது காலத்தின் தேவை. ஈழத்தமிழர்களை தேசமாக ஒன்றிணைப்பதற்கும் அவர்களை அவர்களின் அரசியல் அபிலாசைகளை அடைவதற்கான சரியான பாதையில் ஒற்றுமையாக ஜனநாயகப் பலத்துடன் வ்ழிநடத்திச் செல்வதற்கும் அது அவசியமானது. அது தமிழர்களை மேலும் பிளவுபடுத்தாது ஒற்றுமைப்படுத்தவதாகச் செயற்பட வேண்டும். அரசியல் தலைவர்கள் கடந்தகாலத் தவறுகளைத் திருத்திக் கொண்டு உண்மையாக தமிழ்த் தேசியத்துக்கு உழைப்பவர்களாக மாறவேண்டும். ஆரோக்கியமான விமர்சனங்களை ஏற்று ஒவ்வொருவரும் தம்மை சுயபரிசோதனைக்கு உட்படுத்தவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தல்...

தேர்தல் விதிமுறைகளை மீறியமை தொடர்பில் 5,401 முறைப்பாடுகளும், வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 34 முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

கடந்த ஜூலை மாதம் 31ஆம் திகதி முதல் இதுவரையான காலப் பகுதியிலேயே இந்த முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதேநேரம், கிடைக்கப்பெற்ற மொத்த முறைப்பாடுகளில் 4,929 முறைப்பாடுகள் தீர்த்து வைக்கப்பட்டுள்ளதுடன், 622 முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, நேற்று தேர்தல் வாக்குப் பதிவுகளின் போது வன்முறைகள் எதுவும் பதிவாகி இருக்கவில்லை என்றும் தெரிவானது. (ஐ)

## சட்டத்தை...

அமைப்பின் பணிப்பாளர் நாயகம் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

தேர்தல் நாளில் ஒரு வன்முறைச் சம்பவமே பதிவானதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

2 வாக்குச் சீட்டுக் கிழிப்பு சம்பவங்களும், வாக்குச் சீட்டை ஒளிப்பதிவு பதிவு செய்த சம்பவங்கள் இரண்டும் பதிவாகின என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ஐ)

## வல்லிபுர...

ஆலய தீர்த்தத் திருவிழாவின்போது கடலில் நீராடியபோது காணாமல் போனவருடையது என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

சாவகச்சேரி - நுணாவிலை சேர்ந்த தயாரூபன் வைஷ்ணவன் (வயது - 30) என்ற இளம் குடும்பஸ்தரே என்பவரே இந்த சம்பவத்தில் உயிரிழந்தார். இவர் வேம்படி மகளிர் கல்லூரி ஆசிரியர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சடலம் தொடர்பான மரண விசாரணைகளை பதில் நீதிவான் பா. சுப்பிரமணியன் மேற்கொண்டார்.

மீட்கப்பட்ட சடலம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்ற இதே வேளை, அன்றைய தினம் வடமராட்சி கிழக்கு - அம்பன்குளத்தை சேர்ந்த கந்தசாமி வினோகரன் (வயது 54) என்பவரும் கடலில் மூழ்கி உயிரிழந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நாடு முழுவதும்...

முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் உத்தியோகத்தர்களும் கலகமடக்கும் பொலிஸாரும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். முக்கியமான பகுதிகளில் வீதித் தடைகளை அமைத்துள்ளோம். தேர்தல் முடிவுகள் முழுமையாக உத்தியோகபூர்வமாக வெளியாகும் வரை இந்த விசேட பாதுகாப்பு திட்டம் தொடரும் - என்றும் அவர் கூறினார்.

அத்துடன், பேரணிகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்த அவர் பொதுமக்கள் இந்த விதிமுறைகளை பின்பற்றவேண்டும், சட்டம் ஒழுங்கை பேணுவதில் சட்ட அமுலாக்கல் அதிகாரிகளுக்கு உதவவேண்டும். அமைதிக்கு பங்கம் விளைவிக்கும் நடவடிக்கைகளில் எவராவது ஈடுபடுவது தெரிந்தால் உடனடியாக பொலிஸாருக்கு அறிவிக்கவேண்டும் என்றும் கூறினார்.

வடக்கு, கிழக்கு மக்கள் 107 என்ற இலக்கத்தின் மூலம் அறிவிக்க முடியும். ஏனைய மாகாணங்களின் மக்கள் 119, 118 என்ற அவசர தொலைபேசி இலக்கங்கள் மூலம் அறிவிக்க முடியும். இதே நேரம், 011 202 7149, 011 201 3243, 111 239 9104 என்ற தொலைநகல் இலக்கங்கள் மூலமும் அறிவிக்க முடியும். (ஐ)

# எவர் ஜனாதிபதியானாலும் அவருக்கு ஆதரவளிப்பேன்

### முன்னாள் ஜனாதிபதி மைத்திரி



கொழும்பு, செப். 22

எவர் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டாலும் அவருக்கு ஆதரவளிப்பேன் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பொலநறுவையில் வாக்களித்த பின்னர் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் தேர்தல்களுக்காக அரசாங்கம் 4 ஆயிரம் கோடி ரூபாயை செலவிடவேண்டும் என்பதால் புதிய ஜனாதிபதி பல சவால்களை எதிர்கொள்வார். இந்தத் தேர்தலுக்கான செலவு மாத்திரம் ஆயிரம் கோடி ரூபாய், மாகாண சபைகள், உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களுக்காக மேலும் ஆயிரம் கோடி ரூபாயை செலவிட வேண்டியிருக்கும். இந்த செலவுகளுடன் புதிய ஜனாதிபதி பொருளாதாரத்தை கையாள்வது பொதுமக்களுக்கு சேவைகளை வழங்குவது போன்றவற்றில் பெரும் சவால்களை எதிர்கொள்வார். நான் அரசியலிலிருந்து ஓய்வுபெறவில்லை. ஆனால், தேர்தல்களில் போட்டியிடுவதில்லை என்று தீர்மானித்துள்ளேன் - என்றார். (ஐ)

# கட்டுநாயக்கா விமான நிலையத்தில் 200 விமானப் படையினர் பாதுகாப்பு

கொழும்பு, செப். 22

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

விமான நிலையத்தில் 200 விமானப் படையினர் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# தேர்தல் கடமையிலிருந்த பொலிஸ் அதிகாரி மரணம்!

கொழும்பு, செப். 22

வாக்களிப்பு நிலையத்தில் கடமையாற்றிய பொலிஸ் உத்தியோகத்தர் திடீர் சுகவீனம் காரணமாக பொலநறுவை பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் நேற்று உயிரிழந்தார் என்று புலஸ்திபுர பொலிஸார் தெரிவித்தனர்.

பொலநறுவை புலஸ்திபுர விஜிதா ஆரம்ப பாட சாலையின் வாக்களிப்பு நிலையத்தில் கடமையில் இருந்த போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த திடீர் மரணம் தொடர்பில் பொலநறுவை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஷான் டி சில்வாவின் ஆலோசனையின் பேரில் புலஸ்திபுர பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## ஊரடங்கால்...

அத்துடன், வாக்கு எண்ணிக்கை தடைப்படாமல் இருப்பதை உறுதி செய்யுமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவை வலியுறுத்துகிறோம் என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ)

## சிலிண்டர்...

என்று தெரியவந்தது. எனினும், சிலிண்டர் வெடித்தது தற்செயலான சம்பவம் அல்லது யாராவது அதனை திட்டமிட்டு வெடிக்க வைத்தனரா என்று அயலவர்கள் சந்தேகம் எழுப்பியுள்ளனர்.

அவரின் வீட்டு வாசலில் மிளகாய்த்தூள் வீசப்பட்டிருந்ததாகவும் கூறப்பட்டது. (ஐ)

(முன்னர் வந்த செய்தி 2ஆம் பக்கத்தில்)

## 70சத வீதத்துக்கு...

| | | |
|---|---|---|
| கொழும்பு | - | 78 சதவீதம் |
| நுவரெலியா | - | 80 சதவீதம் |
| களுத்துறை | - | 75 சதவீதம் |
| அம்பாந்தோட்டை | - | 78 சதவீதம் |
| புத்தளம் | - | 70 சதவீதம் |
| அநுராதபுரம் | - | 75 சதவீதம் |
| பொலநறுவை | - | 78 சதவீதம் |
| பதுளை | - | 73 சதவீதம் |
| மொனராகலை | - | 80 சதவீதம் |
| இரத்தினபுரி | - | 80 சதவீதம் |
| கேகாலை | - | 75 சதவீதம் |
| கம்பஹா | - | 80 சதவீதம் |
| காலி | - | 74 சதவீதம் |
| மாத்தறை | - | 75 சதவீதம் |
| குருநாகல் | - | 79 சதவீதம் |
| கண்டி | - | 75 சதவீதம் |
| மாத்தளை | - | 74 சதவீதம் |

# ஒரு வார காலத்துக்கு பேரணி செல்ல தடை



கொழும்பு, செப். 22

ஜனாதிபதித் தேர்தல் இறுதி முடிவுகள் வெளியாகும் வரையிலான காலப் பகுதி மற்றும் அதன் பின்னரான காலப் பகுதி உள்ளடங்களாக ஒரு வார காலத்துக்கு வாகனங்களினூடாகவோ அல்லது நடை பயணமாகவோ பேரணி செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

சட்டம் ஒழுங்கை பாதுகாக்க மக்கள் ஒத்துழைக்க வேண்டும் எனவும் நடைமுறையில் உள்ள சட்டங்களை மீறும் பட்சத்தில் அதிகாரத்தை பயன்படுத்தி சட்டம் ஒழுங்கை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டி ஏற்படும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (எ)

## யாழ்.நல்லூர்

அரியநேத்திரன் 10 ஆயிரத்து 97 வாக்குகளை பெற்று முதலிடம் வகித்தார்.

ரணில் விக்கிரமசிங்க 8 ஆயிரத்து 804 வாக்குகளை யும், சஜித் பிரேமதாஸ 7 ஆயிரத்து 464 வாக்குகளையும் அநுரகுமார திஸநாயக்கா 3 ஆயிரத்து 835 வாக்குகளையும் பெற்றனர். (ஐ)

## வடக்கு..

மாவட்டத்தில் 73.8 சதவீத வாக்களிப்பும் நடைபெற்றன.

வடக்கு, கிழக்கில் வழக்கமாக ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் வாக்களிக்கும் வீதத்துடன் ஒப்பிடுகையில் இது அதிகமாகும்.

இதேநேரம், நுவரெலியா மாவட்டத்தில் அதியுச்ச வாக்குப் பதிவாக 80 சதவீத வாக்களிப்பு நடைபெற்றது. இதேநேரம், குறைந்த வாக்குப் பதிவு மாவட்டமாக யாழ்ப்பாணம் பதிவாகியுள்ளது.

இந்தத் தேர்தலில் வாக்களிக்க ஒரு கோடியே 71 இலட்சத்து 40 ஆயிரத்து 354 பேர் தகுதி பெற்றிருந்தனர்.

நேற்றைய தினம் 13 ஆயிரத்து 421 வாக்களிப்பு நிலையங்களில் அவர்கள் வாக்களித்தனர். 51 வாக்கு எண்ணும் நிலையங்கள் செயல்பட்டன.

நேற்றைய தினம் 8 ஆயிரம் பேர் நாடளாவிய ரீதியில் நேற்று தேர்தல் கண்காணிப்பு பணிகளில் ஈடுபட்டிருந்தனர்.

இதேநேரம் நேற்றைய தினம் 83 ஆயிரம் பொலிஸார், 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், 2 ஆயிரத்து 500இற்கும் மேற்பட்ட விசேட அதிரடிப் படையினரும் பாதுகாப்பில் ஈடுபடுத்தப்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அநுரகுமார...

நாட்டின் ஒன்பதாவது ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான தேர்தல் நேற்று சனிக்கிழமை நடைபெற்றது. முதல்கட்டமாக தபால் மூல வாக்களிப்பு முடிவுகள் நேற்று நள்ளிரவு முதல் வெளியாகின.

தேர்தல் முடிவுகளின்படி தென்னிலங்கை தேர்தல் மாவட்டங்களில் அநுரகுமார திஸநாயக்கவே முன்னிலை வகிக்கிறார். இரண்டாவது இடத்தில் ரணில் விக்கிரமசிங்கவும் மூன்றாவது இடத்தில் சஜித் பிரேமதாஸவும் நீடிக்கின்றனர். எனினும், இவர்கள் இருவருக்குமிடையே இரண்டாவது இடத்துக்கு நெருக்கமான போட்டி நிலவுகின்றது.

வடக்கு, கிழக்கு மாவட்டங்களைப் பொறுத்தவரையில் சிறுபான்மையினர் அதிகம் வாழும் பகுதிகளில் ரணில் விக்கிரமசிங்கவும் சஜித் பிரேமதாஸவும் முன்னிலை பெற்றுள்ளனர். தமிழ் பொது வேட்பாளர் கணிசமானளவு வாக்குகளை பெற்றுள்ள போதிலும் எந்த மாவட்டத்திலும் முன்னிலை பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதேவேளை, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மட்டுமே அரியநேத்திரன் முன்னிலை வகிக்கிறார் என்று உத்தியோகபூர்வமற்ற முடிவுகள் தெரிவித்தன.

இன்று அதிகாலை 4.00 மணி வரை வெளியான வன்னி, திருகோணமலை, பொலநறுவை, மாத்தளை, கொழும்பு, நுவரெலியா, இரத்தினபுரி, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, மொனராகலை, அநுராதபுரம், மட்டக்களப்பு, கேகாலை, திகாமடுல்ல ஆகிய 15 மாவட்டங்களின் தபால் மூல வாக்களிப்பின்படி, அநுரகுமார திஸநாயக்க 2 இலட்சத்து 24 ஆயிரத்து 903 வாக்குகளை பெற்று முதலிடத்தில் நீடிக்கிறார்.

ரணில் விக்கிரமசிங்க 89 ஆயிரத்து 419 வாக்குகளையும், சஜித் பிரேமதாஸ 83 ஆயிரத்து 567 வாக்குகளையும் பெற்று அடுத்த இடங்களில் நீடிக்கின்றனர். அரியநேத்திரன் 2 ஆயிரத்து 940 வாக்குகளைப் பெற்றுள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# வாக்குச்சீட்டை கிழித்த யாழ். இளைஞன் கைது

யாழ்ப்பாணம், செப். 22

**ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் வாக் களிக்க வந்த இளைஞன் ஒருவர் வாக்குச்சீட்டை கிழித்த தால் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.**

நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலையில் நேற்றைய தினம் சனிக்கிழமை வாக்களிக்கச் சென்ற இளைஞன், தனது வாக்காளர் அட்டையை காண்பித்து அடையாளத்தை உறுதிப்படுத்தி, வாக்குச்சீட்டினை கைகளில் பெற்ற பின்னர், வாக்களிக்காமல் வாக்குச்சீட்டினை கிழித்துள்ளார்.

அதனை அங்கிருந்த அதிகாரிகள் கவனித்து, பொலிஸாருக்கு அறிவித்ததை அடுத்து, பொலிஸார் இளைஞனை கைது செய்தனர்.

இவ்வாறு, கைது செய்யப்பட்ட இளைஞனிடம் பொலிஸார் மற்றும் தேர்தல்கள் திணைக்கள உத்தியோ கத்தர்கள் மேற்கொண்ட முதற் கட்ட விசாரணையின்போது, அந்த இளைஞன் தேர்தலில் வாக்களிப் பது இதுவே முதல் தடவை என தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், ஆணைக்குழுவின் அறிவுறுத்தலுக் கமைய அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரி விக்கப்பட்டுள்ளது. (எ)

# ஒற்றுமையுடன் செயல்படுவது அனைவரின் பொறுப்பாகும்

## ஜனாதிபதி வேட்பாளர் சஜித் தெரிவிப்பு



கொழும்பு, செப். 22

ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ ராஜகிரிய கொட்டு வேகொட விவேக ராம புராண விகா ரையில் அமைக்கப் பட்டிருந்த வாக்க ளிப்பு நிலையத்தில் வாக்களித்தார்.

இதன் பின்னர் கருத்து தெரிவித்த அவர், ஜனநாய கத்தை பாதுகாத்து சமாதானத்துடனும் நட்புடனும் ஒற்றுமையுடனும் செயல்படுவது அனைவரினதும் கடமையும் பொறுப்பும் என தெரிவித்தார்.

இந்த தேர்தலை ஜனநாயக ரீதியில் அமைதியுடனும் நட்புடனும் நடத்தி ஜனநாயகத்தை வெற்றிபெறச் செய் வது நம் அனைவரின் பொறுப்பும் கடமையும் ஆகும் என்றும் அவர் கூறினார். (எ)

# இலங்கையின் மிகவும் அமைதியான தேர்தல்

## அமைச்சர் அலிசப்ரி பெருமிதம்

கொழும்பு, செப். 22

இலங்கையில் மிகவும் அமைதியான தேர்தலை நாங் கள் பார்த்துள்ளோம் என வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வரு மாறு,

நாடு எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடி முதல் நாங்கள் பார்த்த அனைத்துக்கும் அப்பால் இலங்கையர் கள் ஒன்றிணைந்து பொருளாதாரத்தையும் ஜனநாயகத் தையும் கட்டியெழுப்பியுள்ளமை உண்மையிலேயே உத்வேகம் அளிக்கும் விடயம்.

சுதந்திரமான நியாயமான தேர்தலை நடத்துவதற் காக பணியாற்றிய அனைவருக்கும் நன்றியுடையவர்க ளாக உள்ளேன்,

மக்களின் குரல் எந்தவித அச்சமும் விருப்பு - வெறுப்பு மின்றி செவிமடுக்கப்பட்டுள்ளது - என்றார். (எ)

# 106 வயது நபர் திருமலையில் தனது வாக்கை செலுத்தினார்



திருகோணமலை, செப். 22

திருகோணமலை மாவட்டத்தில் 106 வயது நபர் தனது வாக்கை பதிவு செய்தார்.

திருகோணமலையின் மூத்த பிரஜையான ஜோன் பிலிப் லூயிஸ் (வயது 106) நாட்டின் 9ஆவது ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான தனது வாக்கை நேற்று திருகோணமலை புனித மரியாள் கல்லுரியில் பதிவு செய்திருந்தார்.

நாட்டில் இதுவரை காலமும் குறிப்பாக ஒன்பது தடவையாக இடம்பெறுகின்ற ஜனாதிபதி தேர்தலில் தனது வாக்கை பதிவு செய்ததாகவும் நல்லதோர் ஆட்சியாளர் வரவேண்டும் என்ற நோக்கத்துடன் தனது வாக்கை தான் அளித்தார் என்றும் அவர் கூறினார்.

அத்துடன், இறைவனது ஆசியுடன் எதிர்வரும் காலங்களில் நடைபெறும் தேர்தலிலும் வாக்களிக்க தயாராக உள்ளார் என்றும் கூறினார். (ஐ)

# வாக்களித்த அனைவருக்கும் ஜனாதிபதி நன்றி தெரிவிப்பு

கொழும்பு, செப். 22

ஜனாதிபதித் தேர்தலில் வாக்க ளித்த அனைவருக்கும் நன்றி தெரி வித்த ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க, நாட்டில் அமைதியான மற்றும் சுதந்திரமான தேர்தலை நடத்த முடிந்தமைக்கு மகிழ்ச்சி தெரிவித்ததோடு, தேர்த லில் பங்குபற்றிய அனைத்து வேட்பாளர்களுக்கும் தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கும் நன்றி தெரிவித்தார்.


ஜனாதிபதி ரணில் மற்றும் அவரது மனைவி பேராசி ரியை மைத்திரி விக்கிரமசிங்க ஆகியோர் நேற்றுக்காலை கொழும்பு பல்க லைக்கழக கல்லூரியில் அமைக்கப் பட்டிருந்த வாக்களிப்பு நிலையத்துக்கு சென்று வாக்க ளித்தனர்.

பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த ஜனாதி பதி ரணில்,

அனைவரும் அமைதியாக செயல்பட்டு ஒன்றி ணைந்து புதிய பயணத்தை ஆரம்பிக்கவேண்டும் - என் றார்.

இந்த நாட்டில் ஏற்பட்ட ஸ்திர மற்ற நிலையை முடி வுக்கு கொண்டு வந்து, தேர்தலை நடத்துவதற்கான பின்னணியை தான் உருவாக்கியதை நினைவு கூர்ந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதித் தேர்தல் இந்த நாட்டு மக்களின் எதிர் காலத்தை தீர்மானிக்கும் எனவும் தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய நில வரத்தை கருத்தில் கொண்டு புதிய தலைமைத்துவத்தை பரிசீலிப்ப தற்கு இது சரியான தருணம் என நம்புகின்றீர்களா என ஊடகவிய லாளர் ஒருவரின் கேள்விக்கு பதில ளித்த ஜனாதிபதி, கடந்த இரண்டு வருடங்களில் தான் நாட் டின் பொருளாதாரத்தையும் ஜனநாயகத்தையும் பலப் படுத்திய தாக கூறினார்.



மக்களின் ஜனநாயக உரிமை களை பாதுகாத்து தேர்தலை நடத்த முடிந்தமை குறித்து தாம் பணிவு டன் பெருமை கொள்வதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இந்த தேர்தல் இலங்கையில் ஒரு திருப்புமுனையாகவும், நாட்டை அழித்த பாரம்பரிய அரசியல் மற்றும் பொருளாதார கொள்கைகளில் இருந்து விலகி நாட்டில் புதிய சமூக மற்றும் அரச மைப்பை கட்டியெழுப்புவதற்கான பெறுமதியான சந்தர்ப்பம் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

# புதியவரின் அதிகார மாற்றத்துக்கு ரணில் அமைதியாக வழிவிடுவார்!

கொழும்பு, செப். 22

ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுபவருக்கு ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்க அமைதியாக வழிவிடுவார் என்று தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸநாயக்க எதிர்பார்ப்பு வெளியிட்டுள் ளார்.

ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் வெளியான பின்னர் பொதுமக்கள் அமைதியை பேணவேண்டும். ஜனநாயக ரீதியில் மக்களால் அவரின் பின்னர் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுபவருக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழிவிடுவார்.

அதிகார மாற்றத்தின்போது ஜனாதிபதி எந்த பிரச் னையையும் உருவாக்குவார் என எதிர்பார்க்க வில்லை - என்றார். (ஐ)



# நானே வெற்றிபெறுவேன் வெளியேற வேண்டியதில்லை

## நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு



கொழும்பு, செப். 22

வெற்றிபெறுவேன் என்ற நிலையில் தேர்தலுக்கு முன்னர் நான் நாட்டை விட்டு வெளியேற வேண்டிய அவசியமில்லை என்று சிறீ லங்கா பொதுஜன பெரமுன வின் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் தேர்தலில் வாக்களித்த பின்னர் கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சாதிக்க முடியாத எதனையும் உள்ளடக்காத தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டுள்ளோம். மக்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுப்பேன். நாமல் ராஜபக்ஷ நாட் டின் அரசியல் கலாசாரம் மாறவேண்டும் தெரிவித்துள் ளார்.

நாங்கள் அச்சத்தால் பின்வாங்கும் அரசியல் சக்தி யில்லை. நாட்டிலிருந்து வெளியேற வேண்டிய நிலை காணப்பட்டிருந்தால் நாங்கள் எப்போதோ நாட்டிலி ருந்து வெளியேறியிருப்போம். நாடு பேரழிவுகளை சந்தித்தபோதிலும், நாங்கள் நாட்டிலிருந்து வெளியேற வில்லை. ஆனால், பல அரசியல்வாதிகளின் பிள்ளைகள் நாட்டிலிருந்து வெளியேறியுள்ளார்கள் - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் [illegible] பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 22.09.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.